# பன்னீர்செல்வம்
# பாண்டியனார், வேலாயுதம்

530



V211,4N39
N53
109114

லை மன்றம்

# பன்னீர்செல்வம்

## பாண்டியனார், வேலாயுதம்

கலைச்செல்வன்

கலைமன்றம்
சென்னை-1

வெளியீடு : 114
முதற் பதிப்பு : நவம்பர் 1953
உரிமை உடையது

விலை ரூ. 0—8—0

விற்பனை நிலையம் :
எம். எஸ். ராமுலு கம்பெனி
286, சைனா பஜார்
சென்னை-1

# வரவேற்பீர்!

திராவிடத்தின் உயிர் நாடிகளாக இருந்து பணியாற்றிய பெருந்தகையாளர்கள் மூவர் வரலாற்றை இதில் காணலாம். மறைந்த அந்த மாவீரர்களுக்கு நாம் செய்யும் மரியாதை அவர்கள் வாழ்ந்து காட்டிய வழியில் நடப்பதாகும்.

அந்த நல்லவர்களான **பன்னீர் செல்வம், பாண்டியனர், வேலாயுதம்** ஆகியவர்களின் வாழ்க்கையை ஓரளவு இதில் விளக்கியிருக்கின்றோம். புன்முறுவலுடன் வ ர வே ற் பீ ர் என்பதில் ஐயமில்லை எங்களுக்கு.

வணக்கம்

**கலைமன்றத்தினர்**

# ஊடுருவி எழுதியவை

●

ஆராய்ச்சி

| | |
|---|---|
| கோயில்கள் | (இங்கர்சால்) |
| சீர்திருத்தம் | ,, |
| மூடநம்பிக்கை | ,, |
| மதங்கள் | ,, |
| உண்மை | ,, |
| மக்கள் உரிமை | ,, |
| அறியாமை | ,, |
| கடவுள் | ,, |
| அரசாங்கம் | (லெனின்) |
| மாஜி கடவுள்கள் | |
| தொழிலாளர் | (மாஜினி) |

வரலாறு

| | |
|---|---|
| கலிங்கப்போர் | |
| வீரமங்கை ஜோன் | |
| உலகைத் திருத்திய உத்தமர்கள் | (1-ம் பாகம்) |
| ஒளி விளக்குகள் | (2-ம் பாகம்) |
| சீனத்துச் சிங்கம் | |
| ரஸ்புடீன் | |
| வால்டையர் | |
| நெப்போலியன் | |

கதைகள்

| | |
|---|---|
| ரோமியோ-ஜூலியத் | (ஷேக்ஸ்பியர்) |
| லைலா - மஜ்னு | |
| நா நா | (எமிலிஜோலா) |

# பன்னீர்செல்வம்

"1940-ம் ஆண்டு ஜனவரித் திங்களில் ஒரு ஞாயிற்றுக்கிழமை. அது இன்னும் எனக்கு நன்ருக ஞாபகமிருக்கிறது. அப்போது முதலாவது இந்தி எதிர்ப்பு இயக்கம் தமிழ்நாட்டில் மிகத் தீவிரமாக நடந்துகொண் டிருந்தது, திருவல்லிக்கேணி கடற்கரையில், அன்று மாலை ஒரு பிரம்மாண்டமான கூட்டம் கூடியிருந்தது. தமிழர் கூட்டந்தான்! ஜல சமுத்திரத்தை எள்ளி நகையாடுவதுபோல் ஜன சமுத்திரம் திரண்டிருந்தது. கூட்டத்துக்கு ஸர். ஏ. டி. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமை வகிப்பதென்றும், முக்கிய பேச்சாளர் இராமசாமிப் பெரியாரென்றும் ஏற்பாடாகி யிருந்தது. கூட்டத்துக்குக் கேட்கவேண்டுமா!

நானும் என் தங்கை நீலாவும் குறித்த காலத்துக்கு ஒரு மணி முன்னதாகவே சென்று, மேடைக்கருகில் இடம் பிடித்துக் கொண்டோம். ஆகவே, மேடைமேல் நடந்த ஒவ்வொரு சம்பவமும் எங்களுக்கு நன்ருகத் தெரிந்தது.

பன்னீர்செல்வம் தமது முகவுரையைச் சுருக்கமாக முடித்துக் கொண்டார், பின்னர், இரண்டொருவர் பேசியான பிறகு, பெரியார் இராமசாமி பேசுவதற் கெழுந்தார். பேச்சுத் தங்குதடையின்றிக் கடல் மடைதிறந்தாற்போல் சரளமாக வந்து கொண்டிருந்தது. அனுபவ முதிர்ச்சியான கட்டுரைகளும் ஆணித்தரமான புத்திமதிகளும்

பேச்சுப்பிரவாகத்தில் முத்துக்களைப்போல ஒளிவிட்டுப் பாய்ந்தன. 'சிந்தித்துப் பாருங்கள், தோழர்களே'—"என் சொல்லுகிறேனென்றால்"—"என்ன ஞாயம்"—"கேட்பாரில்லையா"—என்பதைப் போன்ற அவருக்கே யுரிய சொற்றொடர்கள் அடிக்கொருதரம் தோன்றி மறைந்தன.

அரைமணி நேரம் பொதுப்படையாகப் பேசிக்கொண்டிருந்துவிட்டு. தமது எதிரிகள் தம்மைப்பற்றிச் சொல்லும் அவதூறுகளுக்குப் பதில் சொல்ல ஆரம்பித்தார், தமது பொதுவாழ்வில், பொதுநலப் பணியே தமது முக்கியக் குறிக்கோளென்றும், எவ்விதச் சுயநலத்தினாலும் தாம் உந்தப்படவில்லை யென்றும் சொன்னார். அப்படிச் சொல்லிக்கொண்டே வந்தவர், கேட்போர் உள்ளத்தில் பாய்ந்து தைக்கும்படியான இரண்டு வாக்கியங்களை அனாயாசமாக உபயோகித்தார். "நான் செத்தால் அழுகிறவர்களில்லை; நான் அழும்படி சாகிறவர்களும் இல்லை" என்பதே அந்த இரண்டு வாக்கியங்கள்.

இச் சொற்கள் என்னையும் நீலாவையும் ஒரே சமயத்தில் திடுக்கிட வைத்தன என்னும் உண்மையை, நானும் அவளும் ஒரே சமயத்தில் ஒருவரை யொருவர் சீண்டிக்கொண்டதிலிருந்து தெரிந்து கொண்டோம்.

"இச் சொற்களின் ஆழத்தையும் அழகையும் கவனித்தாயா, அக்கா" என்றாள் நீலா.

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்."

என்னும் அருமைத் திருக்குறளின் கருத்தை நமது பெரியார் சாதாரண மக்களுக்கும் புலப்படும்படி எத்

துணை லாவகமாகச் சொல்கிறார், பார்த்தாயா, நீலா?" என்றேன் நான்.

அவசரமான பேச்சுவாக்கில் ரத்தினங்கள்போல் விழுந்த மேற்படி சொற்களைக் கூட்டத்திலிருந்த மற்றவர்கள் எவ்வாறு ரஸித்தார்களோ, எங்களுக்குத் தெரியாது. ஏனென்றால், அதற்குள் எங்கும் இருள் கப்பிக்கொண்டது. ஆனால் மேடைமீது தலைமை வகித்த ஸர். பன்னீர் செல்வத்தின் முகத்தில் ஒரு புன்னகையின் சாயல் லேசாகப் படர்ந்தது. விளக்கு வெளிச்சத்தில் இது எங்களுக்கு நன்றாகத் தெரிந்தது. அவர் வாயிதழ்கள் சிறிதே கோணின. அப்போது அந்தப் புன்சிரிப்பின் பொருளை எங்களால் கண்டுகொள்ள முடியவில்லை. ஆனால், அந்தோ பின்னர் நிகழ்ந்த சம்பவங்களை நினைத்துப் பார்க்கும் போது, அது மிக ஆழமுடைய புன்முறுவல் என்று தெரிந்து கொண்டோம். "இவர் அழும்படி சாகிறவர்களா இல்லை? நான் செத்து இவரை அழவைக்கிறேன் பார்" என்று சபதங் கூறுவது போலிருந்தது, ஸர். பன்னீர்செல்வத்தின் அப்போதைய புன்முறுவல்.

* * *

ஸர். பன்னீர் செல்வம் ஏறிச் சென்ற "ஹானிபல் என்னும் ஆகாய விமானம் காணமற்போன செய்தி, **1940**-மார்ச்சுத் திங்கள் **2**-ம் தேதி இரவு தமிழ் நாட்டையே ஒரு கலக்குக் கலக்கி விட்டது. தமிழர்கள் முகத்தில் சிரிப்பு அகன்றுவிட்டது. அதற்குப் பதிலாக ஓர் ஏக்கம் குடிகொண்டது. சனிக்கிழமை இரவெல்லாம் அவர்கள் அங்கங்கே கும்பல் கும்பலாய்க் கூடிக் கவலையோடு பேசிக் கொண்டிருந்தார்கள். 'இறுதிச் செய்தி என்ன'? கடைசித்

தந்தியாவது?" என்று கேட்டுக்கொண்டு, அவர்கள் பத்திரி காலயங்களையும் ரேடியோ நிலையங்களையும் முற்றுகை போட்டபடி யிருந்தார்கள்.

இங்ஙனம் தமிழர்கள் தங்களுக்குக் கிடைத்ததற்கரிய ஒரு செல்வத்தைப் பறிகொடுத்துத் தவித்துக் கொண் டிருந்த நெருக்கடியான நிலைமையில், மறுநாள் **3**-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலையில் சென்னைப் பெத்துநாய்க்கன் பேட்டைத் தமிழர் சங்கத்தின் ஆண்டுக் கூட்டம், படை வீட்டம்மன் கோயிலை யடுத்த மைதானத்தில் நடைபெற் றது. இதற்கு ஈ. வே. இராமசாமிப் பெரியார் தலைமை வகிப்பதென்று முன்னமேயே ஏற்பாடு செய்யப்பட்டிருந் தது. அப்படியே, பெரியார் தலைமை வகித்து முன்னுரை யாகச் சில சொற்கள் பேசுவதற்கு எழுந்தார்.

ஆனால், அப்படிப் பேச எழுந்தவர் பத்துப் பதி னைந்து நிமிடங்கள் வரையில் பேசவேயில்லை. அவர் உடல், நலங் கெடாமல் நன்றாய் தானிருந்தது. பின் ஏன் அவர் பேசவில்லை யென்று மக்கள் அதிசயித்தார்கள். அவர் எதையோ கஷ்டப்பட்டு மீண்டும் மீண்டும் விழுங் குவதைக் கண்டார்கள். பின்னர்தான் விஷயம் புலப்பட் டது. ஒரு கடல் மடைதிறந்தாற்போல் அவர் கண்களி லிருந்து நீர் பெருகிற்று; அவர் உதடுகள் துடித்தன; கை கால்கள் நடுங்கின; முகம் கோவைப்பழம்போல் சிவந்து விட்டது; அவர் தேம்பித் தேம்பி அழுதார். அந்த அழுகை அவரோடு நின்றதா? இல்லையே! ஆண்டுக் குழுமி யிருந்த ஆண் பெண் அனைவரும் அழுதார்கள்.

அவலச் சுவை நிரம்பிய—மக்கள் மனத்திலுள்ள பொய், பொறாமை. காமம், களவு முதலிய மாசையெல்லாம்

போக்கி அதைத் தூயதாக்கும்—அக்காட்சியை ஓர் உண்மைப் புலவன் கண்டிருப்பானாகில், ஒரு காவியம் புனைந்திருப்பான். கைவல்ல சித்திரக்காரன் பார்த்திருப்பானாகில், உள்ளங் குழைக்கும் ஓர் உயிரோவியம் தீட்டியிருப்பான். கல்வியும் கற்பனையு மில்லாத ஓர் ஏழைச் சிறுமியாகிய நான் யாது செய்ய வல்லேன்.

ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம், இனி என் உயிருள்ளளவும் அக்காட்சி என் கண்களை விட்டகலாது. அது மறக்கமுடியாத காட்சி "என்று திருமதி. தாமரைக்கண்ணியம்மையார் அவர்கள் திராவிடத் தலைவர் பன்னீர்செல்வம் அவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த ஓர் ருசிகரமான செய்தியை தமிழகத்திற்குத் தந்திருக்கிறார். இந்த அருமையான படப்பிடிப்பு ஒவ்வொரு திராவிடருடைய இதயங்களிலும் பதியவேண்டும் என்ற ஆசையே இதனை அப்படியே எடுத்துக்காட்டத் தூண்டியது.

பெரியார் இராமசாமி அவர்கள் கண்கள் நீர் சிந்தும் அளவிற்கு அவருடைய மதிப்பைப் பெற்றவர் திரு. பன்னீர்செல்வம் என்றால் அவருடைய புகழ், மதிப்பு தொண்டு இவைகளை எடுத்து விளக்க வேண்டிய அவசியமே இல்லை.

அவருடைய வாழ்க்கை வரலாற்றை முழுதும் பார்க்கும் சந்தர்ப்பம் நமக்கு கிடைக்கவில்லை என்றும் அப்பெரியாரைப்பற்றி நமக்கு கிடைத்தவற்றை யாகிலும் எழுதி திருப்தி அடையலாம் என்றே இதனை எழுதிப் பார்க்கமுற்பட்டேன்.

**பன்னீர் செல்வம்** இது யாருக்கும் தெரியாத பெயர் அல்ல. தஞ்சை மாவட்டத்தில் பல சீர்திருத்தங்கள் செய்

தவர். அந்த ஊர் நகர ஆட்சியை சில ஆண்டுகள் வரை நடத்தியும் இருக்கிருர்.

இவர் பொதுவாழ்வில் புகுந்த காலத்தில் தஞ்சாவூர் ஜில்லாவின் கல்விக் கழகத் துணைத்தலைவராகவும், பின்னர் தலைவராகவும் பணியாற்றி வந்தார். தஞ்சை ஜில்லா போர்டு துணைத்தலைவராகவும் இருந்தார். அதன்பிறகு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தொண்டு செய்திருக்கிருர்.

திரு. பன்னீர் செல்வம் அவர்களுடைய ஆளுந்திறமையே ஆச்சரியமானது. அதுமட்டுமல்ல ஆட்சியாளர்களால் புகழப்பட்டது. பொது மக்களால் புகழ்ந்து போற்றப் பட்டது.

ஒரு காலத்தில் அரசியல் சீர்திருத்தம் பற்றி ஆராய வந்த **சைமன் கமிஷன்** ஒவ்வொரு ஜில்லா போர்டுகளாய் பார்வையிட்டுக் கொண்டே வந்தனர். அதிலே தஞ்சாவூரும் சேர்ந்திருந்தது. தஞ்சாவூரில் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். அந்தக் கூட்டத்தை திரு. செல்வம் அவர்கள் நடத்திய நேர்மையைக்கண்டு வியந்தனர் சைமன் முதலானோர்.

திரு. செல்வம் அவர்களுடைய ஆட்சியிலே நீதி நிலவியது. நேர்மை நிமிர்ந்த நடையுடன் உலவியது. உண்மை உல்லாசமாகப் பவனி வந்தது.

தஞ்சை ஜில்லா போர்டு, ஆட்சிக்குட்பட்ட தஞ்சை அரசரது அறநிலையங்கள் உண்மையான அறநிலையங்களாயின. அந்த அறநிலயங்களால் நடத்தப்பட்டு வரும்

கல்வி நிலையங்கள் எல்லா வகுப்பாருக்கும் படிக்க இடம் தந்தன.

நமது செல்வம் அவர்களுடைய ஆட்சியில்தான் திருவையாறு 'கல்யாண மஹால்' அறச்சாலை தமிழை வளர்க்கத் தலைப்பட்டது.

'சிரேயஸ் சத்திரம்' ஆதித்திராவிட மாணவர்களுக்கு உணவும், உறையுளும் தந்துதவத் தலைப்பட்டதும் நமது செல்வம் அவர்கள் ஆட்சியின் போதுதான்.

நமது செல்வம், ஜில்லா போர்டை நடத்துவதற்குத் தமிழருக்குத் திறனுண்டு என்பதை எடுத்துக்காட்டினார் அனுபவ வாயிவாக. ஆம்! அவர் ஜில்லாபோர்ட் ஊழியர்களான, செக்ரட்டரி, சத்திரம் சூப்பிரண்டெண்ட்டு, சத்திரம் தாசில்தார் ஆகிய பெரிய அலுவலாளர் முதல் காவலாளர்கள் வரையில் எல்லாப் பதவிகளிலும் இருந்து அலுவல் நடத்தித் தமிழர் எல்லாத்தொழிலையும் செய்யும் திறனுடையார் என்பதை உலகிற்குக் காட்டினார்.

அவருடைய ஆளுகையில், ஒருவரும் கடமை தவறியதே கிடையாது. அவர்கள் ஆசிரியர்களானாலும் எஞ்சனீயரானாலும், வேறு எந்த பொறுப்பான வேலைபார்ப்பவரானாலும் தத்தம் கடமையிலிருந்து கடுகளவும் வழுவியதே கிடையாது. அந்த அளவுக்கு நேர்மையான நிர்வாகத்தை நடத்திக் காட்டியவர் நமது செல்வம்.

அவருடைய ஆட்சியில்தான் பாதைகள் அதிகம் போடப்பட்டன. பள்ளிக்கூடங்கள் பெருகின; மருத்துவச்சாலைகள் மலிந்தன; என்றும் மக்களுக்குத் தேவையான பல வசதிகள் அதிகரித்தன.

சென்னை சட்டசபையில் நமது செல்வம் வாதம் செய்வது என்றால் அது ஒரு அலாதியான முறை. அவருடைய வாதத்தை மெச்சாதவர்கள் இருக்கமாட்டார்கள்.

சட்டங்களை அமைப்பதிலும் அதனைத் திருத்துவதிலும் இவருடைய ஆட்சியின் அனுபவமே பெரிதும் பயன்பட்டுள்ளது.

சென்னை ஆட்சியில் உள்நாட்டு அமைச்சராக இருந்து திறம்பட ஆட்சி செய்திருக்கிறார்.

அவர் தனக்கென வாழாது தமிழருக்கென வாழ்ந்தவர். தமிழன் உயரவேண்டும் என்று எண்ணியே அவர் உழைத்தார். கட்டாய இந்தி வந்தபோது அதனை எதிர்த்த தீவிர வாதிகளில் நமது செல்வம் முக்கியஸ்தர்.

செல்வம் திராவிடரின் நலனுக்காக பாடுபடும் நமது செல்வம்; அரசியல் சீர்திருத்தம் பற்றிபேசஇலண்டன்மாநகரில் கூடிய **வட்டமேசை மாநாட்டில்** தமிழருக்காக வாதாடினார்கள்.

இந்தியா மந்திரிக்குத் துணைவராக நியமிக்கப்பட்டு இலண்டன்மாநகரம் சென்றார். சென்றபோது அவர் கூறிய அந்த வாசகம் "தமிழர் நலனுக்காக உழைப்பேன்" என்னும் பொன்னான வாசகம் ஆம் அந்தப் புனித உப தேசம்தான் அவர் கடைசியில் தமிழருக்குத் தந்து சென்றார்.

ஆனால் அவர் திரும்பவில்லை. அவரை ஏந்திச்சென்ற வான ஊர்தியோடு ஓமான் கடல் விழுங்கிவிட்டது. ஆம்!

தமிழர் தலைவரை விழுங்கி விட்டது அந்த ஓமான் கடல்.

ஆயிரமாயிரம் தமிழர்கள் சிந்திய கண்ணீர் ஆம்! ஓமான் கடல் நீரைவிட அதிகமாக இருக்கும். இத்தகைய பெருந்தகை மறைந்தது கண்டுதான் முதலில் அம்மையார் கூறியபடி மலை கலங்கினாலும் மனங் கலங்காத பெரியார் கலங்கிவிட்டார்.

இன்று பன்னீர்செல்வம் அவர்கள் நம்மிடையே இல்லை. இருந்தாலும் அவர் ஒவ்வொரு திராவிடனின் உள்ளத்திலும் உணர்ச்சி மயமாக இருந்து ஊக்குவித்துக் கொண்டே இருக்கிறார்.

**வாழ்க பன்னீர் செல்வம் !**

# பாண்டியனார்

இந்தியா! நாம் பிறந்த நாடு! அடிமைப்பட்ட இந் நாட்டின் சுதந்திரத்திற்குக் காரணம் காங்கிரஸ். அது தான் இந்நாட்டை ஆளத் தகுதியுடையது. ஒரு எதிர்க் கட்சியும் நடமாடக்கூடாது என்பது தேசாபிமானிகளின் சித்தாந்தம். அவர்கள், காங்கிரஸ் என்றால் என்ன? அதனுடைய செயல் திட்டங்கள் என்ன? அதனுடைய உழைப்பில் மக்கள் பங்கென்ன? என்று விளக்குவதில்லை மக்களுக்கு. பின் அவர்கள் கூறியவைகள்தான் என்ன?

காந்தியை நினையுங்கள். அவரைப் பின்பற்றுங்கள். அவரால்தான் நமக்கு சுதந்திரம் கிடைத்தது. இது நம்முடைய அரசாங்கம். இதிலே பிளவு போக்கவேண்டும். எதிர்க் கட்சிகள் என்னென்னமோ சொல்லும். அந்தப் பக்கம் திரும்பியும் பார்க்காதீர்கள். நம் நாட்டில் பல மகான்கள் அவதரித்துள்ளனர். அவர்கள் கூறியவைகளைப் படியுங்கள். ஒற்றுமையாயிருங்கள்; ஏற்றதாழ்வுகள் நம் மால் ஏற்பட்டதல்ல, அது ஆண்டவன் செயல்; பசி, பசி என்று புரட்சி செய்யாதீர்கள்; எல்லோரும் உழைக்க வேண்டும்; ஊதியத்திற்காக என்று இருக்கக்கூடாது, நாட் டிற்காக. மழை பெய்யவில்லை! ஆண்டவனைப் பூஜியுங் கள், அவருடைய அருள் கிட்டும்; படிக்கவேண்டும், பதவி பெறவேண்டும், பணம் சம்பாதிக்கவேண்டும், படாடோப மாய் வாழவேண்டும் என்று எண்ணாதீர்கள். இப்படியே எண்ணினால் நமக்குள்ளாகவே சண்டை ஏற்படும். சுதந்

திரம் பறிபோய்விடும்; அந்நியன் அடிமைப்படுத்திவிடுவான். அதை மறுபடியும் வாங்கமுடியாது. ஆகவே எதிர்க்கட்சியை ஒழியுங்கள் - இப்படிதான் **1953**-ஆம் ஆண்டிலே நாடெங்கும் தேசியத் தோழர்களால் முழக்கப்பட்டு வருகிறது! இதுவே இன்றைய அரசியல் நிலைமை.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் அரசியல் நிலைமை, சமுதாய நிலைமையைப் பற்றி நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். அன்று அந்நியர்கள் நம்மிடம் அண்ட வந்து ஆளும் நிலையை எய்தினார்கள். அவர்களை அண்டிப் பிழைத்தவர்கள் ஒரு கூட்டத்தார். ஆரியர்கள் நம்மைச் சமுதாயத் துறையில் அடிமைப்படுத்தினார்கள். அடிமைகளுக்கு அடிமையாக வாழ்ந்தோம் பல ஆண்டுகளாக. ஆரியர்கள் செய்த சூழ்ச்சியால் 'திராவிடச் சமுதாயத்தினர்' அறியாமையில் அழுந்திவிட்டனர். அதனைப் போக்க 'நாட்டின் நலம் விரும்பிகள்' முன்வந்து தோல்வியுற்றவர்கள் பலர். எதிர்த்துப் போராடி வெற்றி கண்ட சிலரில் ஒருவர் வாழ்க்கையை நோக்குவோம்! யார் அவர்?

'திருமணம்!' இது இன்றைய தமிழர்களிடையே கலந்துவிட்ட வார்த்தை. ஒரு காலத்திலே 'விவாஹ சுப முகூர்த்தம்' என்றால்தான் புரியும். அந்த நிலைமையிலே தமிழின் நிலைமை இருந்தது. அம்மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் நிலைமை மிகவும் கேவலமாய் இருந்தது. ஆங்கிலேயனுக்கு அடிமை ஆரியன். ஆரியனுக்கு அடிமை திராவிடன் என்ற நிலை இருந்தது.

விருதுநகரிலே திருமணம்! ஏ. எஸ்.எஸ்.எஸ். சங்கர பாண்டிய நாடார் குடும்பத் திருமணம். அவர் பிரபல

காங்கிரஸ்காரராகவும், வைதிகப் பற்றுடையவராகவும் விளங்குபவர். அவர் ஆடம்பரத்தை விரும்புபவர். அத் திருமணத்தை நடத்த நான்கு பார்ப்பன புரோகிதர்கள் தேவைப்பட்டது. அதனுடைய சிறப்பு சொல்லாமலே தெரியும்! அழகிய பந்தல்! எங்கும் ஆடம்பரத்தின் அறி குறிகள்! அவ்விடத்தை நிரப்ப பிரபல காங்கிரஸ் தொண்டர்கள், கனதனவான்கள், பணக்கார பிரமுகர்கள், பட்டம் பதவி பெற்றவர்கள் வந்திருந்தார்கள். முகூர்த்த நேரம் நெருங்கிவிட்டது. ஐயர்களும் எழுந்தார்கள் திருமணச் சடங்கை தொடங்குவதற்கு!

திடீரென்று ஒரு அசரீரி கேட்டது, "டேய் சந்திரா கட்டுடா" என்று. அங்கிருந்தவர்கள் குரல் வந்த திக்கை நோக்கினார்கள். இதற்குள்ளாக மணமகன் சந்திரசேகரன், மணமகள் கழுத்தில் மணமாலையையும் சூட்டிவிட்டார். அருகிலிருந்த புரோகிதப் பூனைகள் கட்டினார்கள் மூட்டை; எடுத்தார்கள் ஓட்டம். கூறியவர் பலருக்கும் தெரிந்தவர். தெரியாதவர்கள் பக்கத்திலிருந்தவர்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டார்கள். அதே சமயத்தில் சொல்லா மலே நழுவியவர்களும் உண்டு. குரல் எழுப்பியது யார்?

"இவர் 'சுயமரியாதை' இயக்கத்தைத் தோற்றுவித் தவராயிற்றே, இவருடைய பெரிய தகப்பனார் மகனுக்கு வைதிகத் திருமணம். இதை தடுக்காது சீர்திருத்தம் பேசு கிறார்" என்று பலர் எண்ணினார்கள்.

"நாள் நெருங்கிவிட்டதே திருமணத்திற்கு. உடனடி யாக ஏதாகிலும் ஒரு நடவடிக்கை எடுத்து அதை தடுத்துவிடுங்கள், அத்திருமணம் நம் கொள்கைக்கு புறம் பானது" என்று கூறியவர்களும் உண்டு.

இவர் கொண்ட கொள்கையை நிறைவேற்றுபவர்! அதற்கேற்ற ஆற்றல் அவருக்கு உண்டு என்று எண்ணிய வர்கள் பேசாதிருந்தனர்.

இவர் யார்?

மதுரை! தமிழர்கள் யாவரும் அறிந்ததே! திராவிடத்தில் சிறப்புற்ற நகராக விளங்குவது! பட்டிவீரன் பட்டி அந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு சிற்றூர்! அவ்வூரிலே செல்வந்தராகவும், அதைவிட செல்வாக் குள்ளவராகவும் விளங்கினார் திரு. ஊ. பு. அய்யநாடார். திருமதி. சின்னம்மாள் அவரின் வாழ்க்கைத் துணைவிய ரானார். இத்தம்பதிகள் இல்லற வாழ்க்கையை இனிதே நடத்தி வந்தனர். சிலநாளில் ஒரு பெண் மகவைப் பெற்றனர். பிறகு விஜய ஆண்டு புரட்டாசி மாதம் முதல் தேதி வெள்ளிக்கிழமை **(17—9—1894)** அன்று ஆண் மகவைப் பெற்றனர்.

அவர் தன் பெற்றோருக்கு மாத்திரம் புதல்வராக இல்லை. திராவிடத்தாயின் தனிப்பெரும் புதல்வராகவும் விளங்கினார். ஆம்! அவர்தான் **தன்மான மாவீரர் திரு. சௌந்திரபாண்டியன்.** தமிழை வளர்த்த பாண்டிய மரபிலே உதித்த இவர்தான் தமிழைக் காக்கப் போராடி னார். இவருக்கு உடன்பிறந்தவர்களாக ஒரு தம்பியும், இரு தங்கைகளும் ஆனார்கள். தோழர் சௌந்திர பாண்டியன் அவர்கள் தம்பி, தங்கை, தமக்கைகளுக்கும், பெற்றோர்களுக்கும் அன்புடையவராக விளங்கினார். இவர் குடும்பமே சீரும் சிறப்பும் பெற்று விளங்கக் காரணமாகவும் இருந்தார்.

பாண்டியன் கல்வி கற்கும் பிராயம் பெற்ருர். ஐந்து வயதிலே அவர் பள்ளிக்குச் சென்ருர். முதன் முதலாக இவருக்கு ஆசிரியராக விளங்கினவர் திரு சின்னச்சாமி நாயுடு. தன் குடும்பத்தில் நல்லவராக விளங்கியதுபோல ஆசிரியரிடமும் நல்லவராக விளங்கினர். அவர் ஆசிரிய ரிடம் காட்டிய அன்பாலும், கல்வியிலே காட்டிய அக்கறை யாலும் அதைவிட தன்னுடைய நன்னடத்தையாலும் மேலும் மேலும் படித்தார்.

பிறகு இவருடைய படிப்பு மதுரை, யு. சி. உயர்நிலைப் பள்ளியிலே தொடங்கியது. விருதுநகர் க்ஷத்திரிய வித்தியாசாலையிலே தொடர்ந்தது; சென்னை கிறித்துவக் கல்லூரியிலே முடிவுற்றது. வெறும் படிப்பிலே மாத்திரம் கவனம் செலுத்தவில்லை. கால்பந்தாட்டம், டென்னிஸ், கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களை விரும்பினர் தொடர்ந்தார். அவருக்குப் பொழுது போக்காக அமைந்தது வேட்டையாடுதல், விளையாடுதல். இவை களால் அவர் தன் உடலை திடகாத்திரமாக்கிக் கொண்டார். அதனேடு சேர்ந்த இவர் கல்வி பயிற்சி இவர் அறிவை கூர்மையாக்கியது. பதினெட்டு வயதிற் குள்ளாகவே கல்லூரி படிப்பை முடித்த, விளையாட்டு வீரராய் விளங்கினர்.

**1913**-ம் ஆண்டு இவர் இல்லற வாழ்க்கையைத் தொடங்கிய காலமாகும். அப்பொழுது அவருக்கு வயது இருபது. இவர் தன் வாழ்க்கைத் துணிவியாக தோழியர் பாலம்மாள் என்ற மங்கை நல்லாளைப் பெற்ருர். தோழர் பாண்டியன் அவர்கள் பால்ய பருவத்தில் கவலையறியா காளையாக இருந்தார். அதுபோலவே அவருக்கு அமைந்த

அணங்கும் கவலையைப் போக்கும் அமுதமாக விளங்கினர்.

வாழ்க்கையிலே இன்ப துன்பம் ஏற்படுவது இயல்பு. பாண்டியனர் வாழ்க்கையிலே விதிவிலக்கா! என்றாலும் தனக்கேற்படும் குறைகளைக் குறைக்கவும், இன்பத்தை வளர்க்கவுமாக தன் மனைவி துணைவியானாள். பாண்டியன் - பாலம்மாள், உயிரும்—உடலுமானர், யாழும்—இசையுமானர், பூவும்—மணமும் ஆனர் என்று கூறுவதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. மணவினை தொடங்கிய நாள் முதல் இறுதிவரை இணைபிரியாது வாழ்க்கையை நடாத்தினர். அவர்களுடைய வாழ்க்கை வள்ளுவர் கூறியபடி அன்பும் அறனுமுடைய பண்பும் பயனுமாகிய வாழ்க்கையாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

இவர்கள் இல்லற வாழ்க்கையைக் கண்டு வியந்தனர் பலர். அதைப்போல மற்றத் துறைகளிலும் இவர்கள் இருவரும் சேர்ந்து வெற்றிகண்ட காரியங்கள் கணக்கில. அவைகளைக் கண்டவர்கள் ஆச்சரியப்படுவர், இவைகள்—தங்கள் குடும்பத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு என்று! பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலைத் தொழிலை நடத்த வேண்டுமென்ற எண்ணம் இவர்கள் மனதில் குடிகொண்டிருந்தது . அதற்காக குடிசையிலே வாழ்க்கையைத் தொடங்கினர். ஒரு நாளல்ல! ஒரு திங்களல்ல!! நான்கு ஆண்டுகள் !! ஊக்கங்கொண்டு உழைத்தனர். இடைவிடாத முயற்சி! அவர்களுக்கு வெற்றிப் பாதையைக் காட்டியது. அவர்கள் வாழ்வை நிறைவாக்கிக் கொண்டனர் பணத்தாலல்ல! படாடோபத்தாலல்ல! மதிப்பை விரும்பியதாலல்ல! உழைப்பால் உயர்ந்தனர்.

திருமதி. பாலம்மாள் குடும்பத்தின் குலவிளக்காக விளங்கினார்கள். ஒளிர்வுபெற்ற தன் குடும்பத்தில் குறைகளை ஏற்படாமலிருக்க தீனதயாளன், பாஸ்கரன், கிருட்டினமூர்த்தி என்ற மூன்று புதல்வர்கள், விஜயாம்பிகை என்ற ஒரு புதல்வி தோன்றினர். இன்று பாண்டியனார் பண்புக்கொரு மகளாக விளங்குகிறார் விஜயாம்பிகை — மேலும் பேரன் பேத்திகளையும் பாண்டியன்—பாலம்மாள் பெற்றுள்ளனர்.

தோழர் ஊ. பு. அ. ரங்கசாமி, பாண்டியனாரின் அருமைத் தம்பியாவர். சேரன் செங்குட்டுவன்-இளங்கோ போன்ற தமிழ் மன்னர்கள் வாழ்க்கையைப் பின்பற்றினர். பாண்டியனாரும்—ரங்கசாமியும் அவர்கள் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டது அன்பைத்தான். அதுவே அவர்கள் செல்வாக்கினை செழிப்புறச் செய்தது. தோழர் ரங்கசாமியும் நாகராசன், ராஜாராம் என்ற இரு புதல்வர்களைப் பெற்றெடுத்தார். அவர்கள் தன் அருமைப் புதல்வர்கள்மட்டுமல்ல; பாண்டியனாரின் பேரன்புக்குரிய புதல்வரானார்கள். இரு குடும்பம் ஒரு குடும்பமாக இருவர் உள்ளத்திலும் காட்சியளித்தது. அவர்கள் வாழ்விலே கண்டதெல்லாம் இன்பம்! அந்த இன்பம் பாண்டியனாரின் பண்பால் மேலும் மேலும் வளர்ந்தது.

தோழர் பாண்டியனார் வாழ்க்கையிலே வெற்றியை நோக்கிச் சென்றார். தன் உள்ளத்திலே நல்லபண்புகளை வளர்த்துக் கொண்டார். கருதியபடி காரியத்தைச் சாதித்துக்கொள்வார். அந்தப் பண்புதான் முதலில் பெற்றோரிடம்தொடங்கி அன்பு மனைவியிடம், அருமைப்புதல்வரிடமாகதொடர்ந்து குடும்பம் நாடு வரை வளர்ந்து விட்டது.

தன்னுடைய நற்குணங்களால் இவருடைய செல்வாக்கு கௌரவம் கொழுந்துவிட்டெரிந்தது. அது என்றும் அணையாமலிருக்க ஐக்கியத்தை விரும்பினர். அன்பு கயிற்ருல் ஒற்றுமை கட்டுண்டது. இவரைச் சார்ந்தவர்களும் நல்லப் பண்பினை கைக் கொண்டார்கள். நல்லப் பண்புகளை ஒவ்வொரு உள்ளத்திலும் பண்படச் செய்தார். அதற்காக உழைத்தார்; ஓயாத முயற்சியுடன். அந்த உழைப்பு தான் இவர் தொழிலிலும் வளர்ந்தது. இவர் கைக் கொண்ட எந்த தொழிலும் வளம் பெற்றது, மேலோங்கியதுஎன்ருல் அது உழைப்பால் உயர்ந்தது எனலாம். அவ் வுழைப்பு நல்ல பண்பால் உருவாகியது.

தன் மகன் சான்ருேன் எனக் கேட்ட தாய் பெற்றெடுத்த மகிழ்ச்சியைக் காட்டிலும் பெரிதும் மகிழ்வடைவாள் என்பதற் கிணங்க பாண்டியனர் புதல்வி விளக்கினர். தோழியர் விஜயாம்பிகை — பாண்டியனரின் பண்புக்கொரு மகளாக விளங்கினர் என்ருல் ஒரு எடுத்துக்காட்டால் அறிந்துக் கொள்ளலாம். **27-12-52**-ல் நாகர்கோவிலில் நாடார் மகாஜன சங்க மாதர் மாநாடு ஒன்று நடந்தது. அதிலே தோழியர் விஜயாம்பிகை— கணேசன். தலைமையேற்று நடத்தும் தகுதியைப் பெற்றவரா யிருந்தார்.

அன்று முழக்கிய பெண்ணுரிமையைப்பற்றி நினைந்து நினைந்து உள்ளம் பூரிப்பார் பாண்டியனர். தன்னுடைய பொது வாழ்வை பின்பற்றியதற்காக மகிழ்வுப் பெற்ருர். பெண்ணுரிமைக்குப் போராடும் பெண் மகவைப் பெற்று தந்த பாண்டியனரை வாழ்த்துகிறது மகளிர் உலகம்.

தன் வாழ்க்கையை இனிது நடத்த வாணிபத் துறையைப் பின்பற்றினார். அதற்கேற்ற வல்லமையையும் பெற்றார். பிறரிடம் வாங்குதல், மற்றவரிடம் விற்றல், இடையிலே ஆதாயம். அது வளரும்! நமது கற்பனைக்கும் எட்டாத அளவு, சமயம் வாய்க்குமானால். அதைத்தான் எதிர்பார்ப்பர் பலர், அதன்படி உயர்ந்தோரும் சிலர். அத்தகைய துறையை திறமை என்கின்றனர். அத்திறமை சிலரை வாழவிடுகிறது; பலரை சாகச் செய்கிறது. அதை விரும்பாதவர் வீரர் பாண்டியனார். தன் உழைப்பால் உற்பத்தி செய்வார். அதற்கேற்ற ஊதியம் பெற்று வாழக்கையை நடத்தினார். போர்க் காலத்திலே இயந்திரங்கள் கிடைக்காத நேரம், பாண்டியராஜபுரத்தில் பிறந்தது மதுரைச் சர்க்கரை ஆலை. அது வளர குடிசை வாழ்வு நடத்தினார், தனது துணைவியாகப் பெற்ற மனைவியோடு, நான்கு ஆண்டுகள், இணைந்து பாடுபட்டனர், இடைவிடா ஊக்கத்துடன். அவர் உழைத்தார்.

'கொடிமுந்திரி பயிராகாது' கூறினான் ஒருவன், என்றால் ஆச்சரியமில்லை. அவன் சோம்பலைத் துணை கொண்டவன், அல்லது தன்னம்பிக்கை அற்றவன் என்று கூறிவிடலாம். ஆனால் கூறினது ஒரு பண்ணை இலாகா. அவ்விலாகா அதில் கவனம் செலுத்தாது கைவிட்டது. இதனைக் கேட்ட உழைப்பாளர் பாண்டியனார் சும்மா இருந்துவிடவில்லை. கரம்பு நிலம் காரியத்துக்குதவாது என்று கைவிட்ட நிலத்தில் கரும்பு பயிரிட்டார், துணிச்சலோடு. அத்துணிச்சல் அவர் உழைப்புக்கு உறுதுணை புரிந்தது. பலனே கிடைக்காது, கிடைத்தாலும் உழைப்புக்கேற்றதிற்கு ஈடு செய்யாது என்று எண்ணி இருந்தனர். எதிர்பார்த்ததைவிட ஏராளமான அளவு பலன்

ஆச்சரியப்பட்டார் விவசாய நிபுணர் கே. கே. நாயர். அரசாங்கத்தின் பரிசு ஐந்நூறு வெள்ளிக்காசுகளைப் பெற்றார். பாராட்டுப் பதக்கம் அரசாங்கத்தின் நற்சாட்சியாக விளங்கியது. இதுவும் அவரின் உழைப்பின் உயர்வைக் காட்ட எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ஆனால் அப்பணத்தை குடும்பச் செலவுக்கு கொள்ளவில்லை. அது குணப்பெருங் குன்றேறி நின்றவர் என்று எடுத்துக் காட்ட தஞ்சைப் புயல் நிவாரண நிதிக்கு உதவியது. காலமறிந்து நாட்டு மக்கள் நலிவு நீங்க, அதிலும் ஆதரவற்ற அநாதைகள் அல்லல் போக்க உதவினார் என்றால் அவரின் வள்ளல் தன்மைக்கோர் சான்றாகும்.

ஐந்நூறு ஏக்கர் நஞ்சை, கரும்பு, பழத்தோட்டம் பயிர் செய்திருக்கிறார் தனது நேர் பார்வையிலேயே, தினந்தோறும் அவைகளைச் சுற்றிப் பார்ப்பார். அவைகள் மீது கண்ணுங் கருத்தும் கொண்டிருந்தார். பக்குவமாக பாதுகாத்து வளர்ப்பதிலே அக்கறை கொண்டவர். அவசிய காலத்தில் உழைக்கத் தயங்காதவர்! ஏன் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் பாடுபடுபவர். அதனால் அவர் வாழ்விலே தோல்வியைக் காணுவதில்லை.

பாடுபடும் தொழிலாளர்களுக்கு பகைவன் துன்பம்! வறுமை!...அவர்கள் உழைப்பைப் போற்ற மறந்துவிட்டது இந்த உலகம். ஏன்! நகைக்கக்கூட தொடங்கிவிட்டது. பணத்தின் பெருமை பேசப்படுகிறது! அப்பேச்சே எங்கும் ஒலிக்கிறது. அதனால் பாடுபடுபவரின் செயலை மறந்தே விட்டது. இதனைப் போக்க எண்ணினார் பாண்டியனார். அவர்களிடையே ஒரு கூட்டுறவு ஏற்பட வேண்டும். உழைத்த நேரம் போக ஒருமணி நேரமாவது

தங்கள் தங்கள் குறையை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளவேண்டும்; அவர்களை வாட்டும் அந்தச் சக்தியைக் கண்டுபிடிக்க வேண்டும், எண்ணித் துணிந்தார்களானல் வெற்றிதான்! தன் குடும்ப பிணைப்பைப் போற்றிய பாண்டியனூர் விவசாயிகளிடையே வேற்றுமை போக்க நினைத்ததில் வியப்பில்லை. அதன்படியே **1944**-ல் ஏல விவசாயிகள் சங்கம் மலர்ந்தது. அம்மலரின் மணம் வீசாமலில்லை. அது வளர்ந்தது; விவசாயிகள் வாழ்வு வளம் பெற்றது. ஏலக்காய்க்கு நல்ல விலை ஏற்பட்டது. வறுமைப்பட்டவரிடம் குறைகளைப் போக்க பெரிதும் உதவிற்று விவசாயிகள் சங்கம்.

பொதுநலப் பணியாற்றும் போர்டுகளிலே சேர்ந்து சேவை செய்திருக்கிருர். அதிலே ஒன்று 'இந்தியன் காஃபி போர்டு.' இதில் ஒரு உறுப்பினராயிருந்து, தன் பெருமையைப் பரப்பவேண்டும் என்று எண்ணவில்லை. ஒன்றைச் சாதிக்கக் குறிக்கோளாகக் கொண்டு எழுகின்றவைகள், கூடிய அளவாவது சாதிக்கவேண்டும் என்பது அவர் எண்ணம். இந்தியன் காஃபி போர்டிலே **1941** முதல் உறுப்பினராயிருந்து பணியாற்றி இருக்கிருர். காஃபி பதனிடும் தொழிற்சாலையை கூட்டுறவு முறையில் நிறுவினுர். விவசாயிகள் நலனுக்காக கூட்டுறவு நாணயச் சங்கங்களை அமைத்தார். இவைகள் அன்னாரின் உழைப்பின் பயனை எடுத்துக் காட்டுகின்றன.

தன் குடும்பத்தில் தொடங்கிய அன்பு தொழிலாளரிடையே வளர்ந்தது. தன் குடும்பம், தன் ஊர் என்கிற பற்றுதான் அவர் நாட்டுப்பற்ருக மாறியது. அவர் எப்படி பொது வாழ்வில் பங்கு கொண்டார் என்பதை சிறிது பார்ப்போம்.

பாண்டியனார் கல்வியால் அறிவை வளர்த்துக்கொண்டார்! பணத்தைச் சம்பாதிக்க பயன்படுத்தவில்லை. தன்னைச் சூழ்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் அல்லலுறுகின்றனர். கரையடைய மார்க்கம் தெரியாத கப்பலாகக் காட்சியளிக்கின்றனர். அவர்களிடம் அறியாமை சூழ்ந்திருக்கிறது. கல்வியால் அறிவொளி வீசவும், அதனால் அவர்கள் விளக்கம் பெறவும் காலம் கடந்து செல்லும். துன்பமோ வளருகிறது! அதனைப் போக்க அவர் கையாண்ட முறை பாராட்டத்தக்கது.

அதுதான், தான் பெற்ற கல்விச் செல்வத்தினை பிறருக்கு இல்லை எனாது ஈந்தார். ஆம்! செல்வத்துட் சிறந்த செல்வம் கேள்விச் செல்வம்! கேள்விச் செல்வம் பெற்றவர்களுக்கு முதலில் சந்தேகம்! பிறகு ஆழ்ந்த நம்பிக்கை ஏற்படத்தான் செய்தது. 'செய்துதான் பார்ப்போமே' என்ற துணிவும் பிறந்தது அவர்களிடையில். உணர்ந்துவிட்டார்கள் தன்னலம் கருதாது உழைக்கும் பாண்டியனார் என்பதினை. அவரைப் பொது வாழ்விலே ஈடுபடுத்தி ஊக்கம் பெறச்செய்ய ஒத்துழைத்தனர். அவர் காட்டிய வழியைப் பின்பற்றினர்.

**1920**-ல் சென்னை சட்டசபையில் மேல்சபை உறுப்பினரானார். அதுபோது அவருக்கு வயது இருபத்தாறு. அதுமுதல் மூன்று முறைகள் மேல் சபையின் உறுப்பினராக இருந்து பணியாற்றி இருக்கிறார். **1937** வரை அவர் சட்டசபையில் அங்கம் பெற்றிருந்தார். தொடர்ந்து மூன்று தடவை சட்டசபையிலே அங்கம் பெற்றார் என்றால் அவரின் செல்வாக்கை சொல்லித் தெரிந்துக் கொள்ள வேண்டியதில்லை.

பாண்டியனார் ஏழையின் பங்காளராக விளங்கினார். வாழ்விலே வலிமை யற்றுழன்றோருக்கு வாழ்வளித்தார். பாட்டாளிகளிடையே பாடுபடுபவராக விளங்கிய பாண்டியனார், பணக்காரர் தொடர்பையும் பெற்றார். செல்வக் குடியிலே பிறந்த அவர் சீமான் வாழ்வை சீறினார். ஆனாலும் சீமான்களை வெறுக்கவில்லை. இல்லாதாருக்கும் உள்ளவருக்கும் வேற்றுமை அகழி வெட்டவில்லை. இருவரிடையே ஒற்றுமை பாலத்தை அமைக்க விரும்பினார். எல்லா விதத்திலும் செல்வாக்குடையவர்கள், தன்னைவிட மேம்பட்டவர்கள், ஆடம்பர வாழ்வையும் அதனால் வருகின்ற பெருமையினையும் விரும்புபவர்கள் பலர் அவர்கள் இவருக்கு நண்பர்கள், நெருங்கிய தொடர்பை யுடையவர்கள். அன்று சிறப்புடையவர்களாக கருதப்பட்ட திரு. பி. டி. ராஜன், ஆர். கே. சண்முகம், டாக்டர் பி. சுப்பராயன் போன்றவர்கள் இவருக்கு தோழமையுடையவர்களானார்கள். இதிலிருந்தும் அவருடைய சிறப்பு சொல்லும் திறமன்று.

**1926**-ம் ஆண்டு அவர் வாழ்க்கையிலே ஒரு குறிப்பிடப்பட வேண்டிய நாள். அக் காலத்திலே காங்கிரசுக்கு மிக்க செல்வாக்கு இருந்தது. இப்பொழுது சென்னையிலே டாக்டர் பி. சுப்பராயன் முதன் மந்திரியாக இருந்தார். அப்பொழுது எதிர்க்கட்சியாக விளங்கியது ஜஸ்டீஸ் கட்சி. இக் கட்சியின் மூலம் ஒரு நல்ல பயனும் ஏற்பட்டது. ஆங்கிலேயன் காலத்திலும் ஆரியர்கள் அண்டி வாழ்வதிலே கைதேர்ந்தவர்களா யிருந்தனர். அவன் ஒழிந்து காங்கிரசு அரசினைக் கைப்பற்றிய காலத்து ஆரியப்படை காங்கிரசு போர்வையிலே மறைந்துக் கொண்டது. காங்கிரசின் மூலத்தானம் டில்லியிலே உள்ளது

என்பதினை உணர்ந்தனர். வரலாற்றிலே ஆரியமொழியோ, ஆரிய நாடோ சிறப்புற்று விளங்கியது, செயல் பல செய்தது என காண்பது அபூர்வமே.

அத்தகையவர்கள், வடவர் ஆதிக்கத்தை நிலைநிறுத்த வேண்டும் தென்னாட்டில். அப்பொழுது தான் தங்கள் வாழ்வு நிலைக்கும் என்று எண்ணினர். ஓரினத்தவருக்கு பயன் படுகிறது காங்கிரசு என்று உணர்ந்தது ஜஸ்டிஸ் கட்சி. அதில் பணியாற்றிய சர். ஏ. டி. பன்னீர் செல்வம் போன்றவர்கள் காங்கிரசுக்கு எதிராக போட்டி யிட்டதில் தவறு இருக்க முடியாது. அக்கட்சியின் அபிமானத்தைப் பெற்றார் பாண்டியனார். அதன்மூலம் பார்ப்பனரல்லாதாரின் நன்மைக்கான சட்டசபை நடவடிக்கைகளிலே, அவர்களுக்கு உறுதுணையாக விளங்கினார்.

இழிவுற்ற பார்ப்பனரல்லாத சமுதாயம், இன உணர்வுப் பெற்று முன்னேற்றம் எய்துவதே நீதிக் கட்சியின் நோக்கம். அதிலே பாண்டியனார் பணியாற்றினார், நீதிக் கட்சியின் மற்ற தலைவர்கள் கொள்கை மறந்து சந்தர்ப்ப வாதிகளாக மாறுவதை வெளிப்படையாகக் கண்டித்தார். பதவிப் பித்துக் கொண்டு புல்லிளிப்பவர்களை பார்த்தால் கோபம் கொள்வார். அதிகார போதையில் ஆகாத செயல்களை செய்பவர்களை கண்டிக்க தவறியதில்லை. அஞ்சா நெஞ்சினராக விளங்கினார்.

கொள்கையிலே உறுதி, தன்னலமற்ற தன்மை, கண்யமான போக்கு, கடமை யுணர்ச்சி, சிந்தனையிலே தெளிவு, செயலிலே ஒழுங்கு, மன உறுதி, மனிதாபிமானம், பொதுப் பணியிலே ஆர்வமுடையவராய் விளங்கி

னார். உண்மையின் தோழனாய், அன்பின் அரசாய்; கருணை மூர்த்தியாய், நேர்மையின் நேயனாய் விளங்கிய பாண்டிய னார் வாழ்விலே சிறப்புடையவர்கள் வகையற்றனரே, அவர்களை வம்பர்கள் இழிந்தவர்களாக கருதுகின்றனரே இதனைப் போக்கவேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்த பெரியார் தொடர்பைப் பெற்றார். இருவ ரும் நண்பர்களானார்கள்.

நாட்டுப் பற்றுக் கொண்டவர்கள் கட்சிகளைப்பற்றி கவனம் செலுத்தமாட்டார்கள். இந்த கட்சியால் நாம் போடுகிற மூலதனம் பெருகுமா என்று எண்ணுவர் ஒரு சில பணம் படைத்தோர்! நாம் படித்துப் பட்டம் பெற்ற திற்கேற்ப இக்கட்சியால் பதவி கிடைக்குமா என்று ஆராய்வார்கள் படித்த ஒருசிலர். பாண்டியனாரிடம் பண மும் அதற்கேற்ற படிப்பும் இருந்தது. அதைவிட மேலாக நல்ல குணமும் இருந்தது. அவர் கருத்திலே குடிக் கொண்டவைகள் எல்லோரும் வாழவேண்டும். அறியாமைஅகலவேண்டும்! அதனை ஒழிக்கும் கல்வி பரவ வேண்டும். பகுத்தறிவு ஒளி வீசவேண்டும். ஒற்றுமை நிலைக்கவேண்டும்; அதனை பிளவுப்படுத்தும் ஏற்றத்தாழ்வு களை ஒழிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண் டார். உழைப்போர் உயரவேண்டும்! அவர்கள் வாழ்வின் உருவை அழிக்கும் கொடுமையாளர்களை ஒழிக்க எண்ணி னார். இவை அவருடைய கொள்கையாக இருந்திருந்தன. இக்கொள்கைகளை தன்னகத்தே கொண்டு விளங்கியது சுயமரியாதை இயக்கம். இயக்கக் கொள்கையும் தன் கொள்கைகளை ஒற்றுமையுற்றிருப்பதை கண்டுதான் அதில் ஆர்வத்துடன் உழைத்தார். அதனால் அவர் உயர்ந் தார்; அவரால் இயக்கமும் வளர்ந்தது.

பார்ப்பனரல்லாதாரின் உரிமை பறிக்கப் படுவதைக் கண்டித்தார் பாண்டியன், அரசியலிலே எடுக்காட்டினார் பல சான்றுகளுடன். அரசியலில் அங்கம் பெற்றவர்கள், அரசியலில் பார்ப்பனரல்லாதாரின் உரிமை முழக்கத்தை எழுப்பியவர்களில் முதன்மையானவர் ஆவார். சமுதாயத்திலும் செய்த சேவை சொல்லற்கரியது. கடவுள் பெயரால் நடக்கும் இழித்தன்மைகளை எதிர்த்தார். மதம் என்னும் பேயால் மக்கள் மயங்கியுள்ளனர். அதனை ஓட்ட ஈரோடுப் பாதையிலே செல்லுங்கள் என்றார். இந்நாட்டு சாத்திரங்கள் ஏற்றதாழ்வை வளர்க்கின்றன. அது தமிழர்கள் பண்பாட்டிற்கே புறம்பானது. பகுத்தறிவுக்கு பகைவன். அதில் கூறப்படுபவைகள் எத்தர்களின் நயவஞ்சக வார்த்தைகளாகும். அதன் பெயரால் நடக்கும் சடங்குகள் நம் வாழ்வைச் சீர் குலைக்கும். அதனால் ஏமாந்தவர்கள் பலர். உண்மை அறிய முடியாமல் மண்டையை குழப்பிக் கொண்டவர்கள் பலர். எப்பொழுதோ யாராலோ எழுதப்பட்டதை எண்ணி ஏமாந்து போகாதீர்கள்.

நமக்கென்ற ஒரு தமிழ்மறை உண்டு. அது உலகம் போற்றும் உயர்வு நூலாகப் போற்றப்படுகிறது. அது மனித வாழ்விற்கு வழிகாட்டி. அதனைப் பின்பற்றினால் நம்முடைய அறியாமை விலகும். வாழ்வு வளம் பெறும் என்று நாட்டு மக்களுக்குக் கூறினார், 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற நிலைமை ஏற்படவேண்டும். நம்மிடையே பேதங்கள் இருக்கக் கூடாது. மேடுபள்ள மற்ற சமநிலத்திலே தான் நாம் விரும்பும் விளைவைப் பெறமுடியும் என்று பலரிடையே பேசினார்! செயலிலும் இறங்கினார்!

பெரியாரும் பாண்டியனாரும் கலந்த பிறகு உருவானதுதான் சுயமரியாதை இயக்கம். **1929**-ல் செங்கற்பட்டிலே முதல் சுயமரியாதை மாநாடு நடந்தது. அதுவும் பாண்டியனாரின் தலைமையிலேயே சிறப்பாக நடந்தது. அவர் துவக்கிய தன்மானம் பெற்றுவாழ்வதற்கென நடத்திய சுயமரியாதை மாநாடு அன்றிலிருந்து பல நாடெங்கும் நடைப்பெற்றன. அவரால் துவக்கப்பெற்ற, வரவேற்கப்பெற்ற, தலைமை தாங்கப் பெற்ற சுயமரியாதை மாநாடுகள், சீர்திருத்த மாநாடுகள் மிகப் பலவாகும்.

இவர் செய்கையைக் கண்டு ஆச்சரியப்பட்டவர்கள் பலர். சீறி விழுந்தவர்களும் உண்டு. ஆத்திரங் கொண்டு ஆவேசப்பட்டவர்களும் உண்டு. அவர்கள் பணக்காரர்கள் பட்டம் பதவிப் பித்தர்கள், அதிகார போதையிலே மயங்கியவர்கள், சந்தர்ப்ப வாதிகள், தன்னலப் பேய்கள், எத்தர்கள் ஆவர். பாண்டியன் நல்ல பண்புடையவனாயிற்றே! உழைக்கும் உத்தமனாயிற்றே! கெட்டுவிட்டான் நாத்தீகர்களுடன் சேர்ந்து! சாதியை சாடுகிறானே சமயத்தை சடங்கை ஒழிக்கிறானே சாத்திரங்கள் பொய் என்கின்றானே, கடவுள் இல்லை என்கிறானே என்று ஏசினர். இதனால் ஒரு சிலருடைய நட்பு விலகியது. இவராக விலக்கிக் கொள்வதில்லை. கெட்டவர்களையும் தட்டிக் கொடுத்து நல்லறிவு புகட்டும் இவர் யாரையும் தனிப்பட்ட முறையில் எதிர்ப்பதில்லை. எல்லோரையும் ஒன்றாகக் கருதும் இவருக்கு அக நட்பினர் பலர் ஏற்பட்டனர். புற நட்பினர் விலகினார். நினைத்ததைச் சாதிக்கும் வல்லமையுடைய செயல் வீரராக விளங்கினார் பாண்டியனார்.

**1928** முதல் இரண்டாண்டுகள் இராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவராகவும் **1943** முதல் நான்காண்டு

வரை மதுரை ஜில்லா போர்ட்டு தலைவாாகவும் பணியாற்றினர். வெறும் பதவிப் பித்தராக இருக்கவில்லை. பதவி மூலம் உருவான செயலை உண்டாக்க நினைத்தவர். ஆட்சியிலே நேர்மை இருக்க வேண்டும் என்பதற்காக ஒரு முறை ஜில்லாபோர்டு தலைமைப் பதவியை வீசி எறிந்தவர் பாண்டியனூர்.

அவர் ஆட்சியிலே சேர்ந்து செய்துள்ள காரியங்கள் பல. அதற்கென அவர் கொண்ட பெருமுயற்சிகள் பல— தொல்லைகள் ஏற்படுமே என்று எண்ணி இறங்குவதில்லை. எக்காரியத்தையும் நன்ருகச் சிந்திப்பார் சிந்தித்து ஒரு முடிவுக்கு வருவார். அது வெற்றி பெறுமா! அதனல் நம் வாழ்வு பாதிக்கப்படுமோ என்று கருதாதவர்; நல்ல காரியங்கள்! அதற்கு தடையென மலையே எதிர்த்து நிற்கினும் அதனை எதிர்த்தே சென்றவர்.

மனிதரிலே தாழ்த்தப்பட்டவராம், அவர்கள் பாடு படுவதற்காகப் பிறந்தவர்களாம் இதை கூறியவர்கள் யார் என்று கேட்டார்! அந்த தாக்குதலிலே எதிர்ப்பு தடை இடிந்து விழுந்தது. தாழ்த்தப்பட்டோருக்கு பொதுக் காரியங்களில் உரிமை ஏற்பட்டது. பொதுமையான காரியங்களையும் செய்ய தயங்கினதில்லை. போக்குவரத்து நாகரிக காலத்திற்கு அவசியமானது என்று நினைத்தார். அதன்படியே பல போக்குவரவு வசதிகள் செய்துதந்தார்.

சாதிமத வேற்றுமைகள் தமிழர் பண்புக்கு புறம்பானவை. அது மக்களை பிரிக்கத்தான் செய்யும். சிதறியவர்களிடம் காரியம் உருவாகாது. ஆகவே மக்களை ஒன்று படுத்த விரும்பினர். சாதிமதம் நமக்குப் புறம்பானது

என்று எடுத்துக் காட்டுகள் பல காட்டினார். அவர் காட்டிய வழியை பின்பற்ற பல இளைஞர்கள் தயாராய் இருந்தனர். அவர்களிடையே கலப்பு மணங்களை முன்னின்று நடத்தினார்! இதைப்போலவே எங்கும் பரவவேண்டும் என்று கூறினார்! அது எங்கும் பரவிக்கொண்டு வருகிறது இதனைக் கண்டு அஞ்சுகிறது சனாதனக் கூட்டங்கள்; தங்கள் ஏமாற்றுந் தொழில் நடைபெறாதே எனறு. அவர்கள் ஊளையிட்டுப் பார்த்த உன்மத்தர்கள். ஊதாரித்தனமான செயலிலே இறங்க முற்பட்டனர். அவர்களின் சலசலப்புக்கு அஞ்சாது காரியங்களை நடத்தினார் பாண்டியனார்.

எதிர்காலத்தில் வாழப்போகும் வருங்காலப் பெரியோர்களைப் பற்றி அவர் அக்கரைக் கொண்டார். இன்று நம்முடைய செயல் வெற்றிப் பெறாவிட்டாலும் எதிர்காலத்திலாவது பயன் அளிக்கக் கூடும் என்று எண்ணினார். மக்களிடையே அறிவை வளர்க்கவேண்டும். சிறப்பாக மாணவர்கள் ஒவ்வொருவரும் கற்கவேண்டும் என்று எண்ணினார். அதற்காக தன்னுடைய சொந்த பணத்தைக் கொண்டு கல்விக் கட்டடங்கள் கட்டினார். மேலும் பலருடைய உதவியைக் கொண்டும் ஆதரவை அண்டியும் பள்ளிக்கூடங்கள் முன்னேற்றத்திற்கும் வழி செய்தார். தொடங்கிய காரியம் இடையிலே தடைபடக் கூடாது என்ற எண்ணம். அதனுடன் பொது அறிவை வளர்க்கவும், அதில் பொது மக்களும் பங்கு கொள்ளவும் பல அறிவு மன்றங்களைத் திறந்தார். அதிலே ஒன்றுதான் ‘நாடார் மகாஜன சங்கம்.’

‘நாடார் மகாஜன சங்கம்’ சமூக முன்னேற்றத்திற்கு அறிவகமாயிருந்தது. அச்சங்கத்தில் பயிற்சி பெற்றவர்

கள் சமூக முன்னேற்றத்திற்கு உழைக்கும் உத்தமர்களாக விளங்கினர். பொதுப் பணியிலே ஆர்வமுடையவ ரானார்கள். சமூகத்தில் இழிவு நீங்கவேண்டும்! நம் வாழ்க்கை வளம்பெற வேண்டும். நம்மிடையே ஒற்றுமை வளரவேண்டும் என்று எண்ணினர். அதிலே பல இளைஞர் கள் பங்கு கொண்டனர். நாளுக்கு நாள் வளர்ந்தது அவர்கள் மூலம்; அவரவர்கள் குடும்பம் சிறிது சிறிதாக முன்னேற்றம் அடைந்தது. இளைஞர்களின் துடிப்பான செயலைக்கண்டு பெரியோர்கள் முதலில் அதட்டினர்! அதற்கும் அஞ்சவில்லை. காரணம் அவர்கள் செயலில் உண்மை உலவியது; நேர்மை உடன்சென்றது. பிறகு இளைஞர்களின் இடைவிடா உழைப்பால்,பெரியோர்களும் ஒத்துழைக்க வந்தனர்.

பாண்டியனார் இவர்களிடையே பழகினார். அவர் களைப் பண்படுத்த பல முறைகளைக் கையாண்டார். ஒவ் வொருவர் உள்ளத்தையும் எஃகு உள்ளமாக்கினார். அவர் கள் செயலிலே குற்றம் குறைகள் இருந்தால் உடனடி யாகக் கண்டிப்பார். நல்ல செயல்களாய் இருந்தால் பாராட்டவும் தயங்கியதில்லை. இதனால் ஆர்வம் பிறந்தது பலருக்கு. தங்கள் காரியங்களைத் தொடர்ந்து செய்வார் கள். ஒருவருக்கொருவர் அவ்வப்போது ஏற்படும் ஐயங்களை கலந்தாலோசித்து தீர்த்துக்கொள்வர்.

பாண்டியனாரின் பேச்சுக்கள் அறிவைத் தூண்டுவ தாகவும், அதனை வளர்ப்பதாகவும் இருந்தது. அவர் அனுபவத்தோடு கூடிய அறிவு இளைஞர்களுக்கு வழி காட்டியாக இருந்தது. அவருக்கே அமைந்த நற்பண்புகள், அதற்கான அவர் கொண்ட செயல் திட்டங்கள் மிகவும்

துணிகரமானவை. இதில் சந்தேகமின்றி இறங்கியவர்கள் பலர். அவர்மீது அவ்வளவு அபிமானம். நாட்டின் நலனைக் கோருபவர்கள் இவர் செயலிலே சந்தேகம் கொள்ள வில்லை.

இவர் அறிவுரையைப் பெற்றவர்கள் மாசற்ற பண்பினரானார்கள்; செயலிலே துணிவு கொண்டார்கள்; நிர்வாகத் திறமை பெற்றவர்களானார்கள்; பொறுப் புணர்ந்து காரியமாற்றும் பண்பினரானார்கள். அவர்க ளிடையே குடும்ப பாசம் தவழ்ந்தது என்றால் மிகை யாகாது. பொதுநலப் பணியாற்றும் இளைஞர்கள் அறிவை வளர்த்துக்கொள்ளவும் ஏதுவாய் இருந்தது. கண்ணியமுடையவர்களாக, கடமையுணர்ச்சி உடையவர்க ளாக திகழ்ந்தார்கள் ஒவ்வொருவரும்.

'நாடார் மகாஜன சங்கம்' பல வளர்ந்தன. அதற் கென மாநாடுகள் பல நடத்தினர். இதிலே பல சீர்திருத் தச் சிங்கங்கள் உருவாயின. அவர்கள் பகைமையை பாராட்டாதவர்கள்! அவர்களிடம் வைதிகம் தோல்வி யுற்றது. சூழ்ச்சியினர் அரும் பாடுபட்டு வளர்த்த வேற்றுமைகளைப் போக்க வந்தனர். இவர்களிடையே பகைமையை வளர்க்க சந்தர்ப்பம் எதிர்பார்த்த சிலர் ஏமாந்தனர். வீண் சண்டைகளைக் கிளப்பி, வீண்வாதங் களை விளைவித்தனர்; பொய் பிரச்சாரங்கள் பல நடத் தினர்.

இதற்கு கூலிப் படைகள் பல தேவைப்பட்டன, அவர்களைப் பணத்தைக் காட்டி மயக்கினார்கள். அதிகாரம் படைத்தவர் அச்சத்தை ஊட்டினர். நாத்தீகம் ஒரு பூதம், அது உலகத்தை ஒழிக்கும், நாட்டை நாசமாக்கும், நம்

குடும்பத்தைக் குலைக்கும் என்றார்கள். அதற்கு ஆதாரங்கள் இதிகாச புராணங்கள் என்றனர். அன்று இராமரை எதிர்த்த அசுரர்கள்தான் இன்று சு. ம.க்களாக விளங்குகிறார்கள். சு. ம. என்றால் சுத்த மடையர்கள் என்று அர்த்தம் என்றனர்.

ஆம்! ஆரியர்கள் நலம் பல பெற்ற நாட்டை நலிவுக்குள்ளாக்கினார்கள். அதைக் காடாக்கிக் கொண்டார்கள். வாழ்க்கையிலே முன்னேறியவர்களிடையே சூழ்ச்சிகள் செய்தனர். பேதங்கள் வளர்த்து வேற்றுமை ஏற்படுத்தினர். இதனால் சிதறியவர்கள் பலவழிகளைப் பின்பற்றினர். அவர்கள் செல்லும் வழியிலே கொள்ளைக்காரர்களாக, வழிப்பறிப்போர்களாக, வலை வீசுபவர்களாக விளங்கினர் ஆரியர்.

கொடும் புலிகளாகவும். ஊளையிடும் நரிகளாகவும் மாறியவர்கள் பலர். இதற்கு இரையானவர்கள் பலர். காட்டை சீர்படுத்தி நாடாக்க முற்பட்டவர்கள் கண்டது தோல்விதான். அது புத்தர் காலத்திலே தொடங்கியது என்பது ஓரளவு கூறலாம். அது பெரியார் சகாப்தத்திலே தான் செயலில் தொடங்கியது. அவர் அமைத்து தந்த படையில், காட்டிய வழியில் முன்னணி செயல்வீரர் படையிலே தளபதியானார் சௌந்திரபாண்டியனார். கொடும்புலிகள் உலவுமே என்று அஞ்சவில்லை! பாம்புகள் நெளியுமே, விஷஜந்துக்களின் பிறப்பிடமாயிற்றே என்று பயப்படவில்லை, துணிந்து சென்றார்.

தோழர் பாண்டியனாரைத் தொடர்ந்து அவர் வழியிலே இறங்கினர் பலர் செயல் வீரராக. அவர் நடத்

இக்காட்டிய சுயமரியாதை மாநாடுகள் பல, எங்கும் நடந்தன. மக்கள் அறிவு விளக்கம் பெற்றனர். நாடெங்கும் சீர்திருத்த திருமணங்கள் ஒன்றன்பின் ஒன்றாக தொடங்கியது, அதனோடு விதவா விவாகங்களும் வேரூன்றின. விதவை வாழ்வை வேதனைப் படுத்தினர் வீம்பர்கள். அவர்கள் முதலிலே பயங்காட்டினர்! பிறகு ஏசினார்கள்! முட்டுக்கட்டை யிட்டனர். முடிவாக அவைகள் பொடிப் பொடியாயின. தூள்தூளாக மாறின, இன்று மருண்டு விழிக்கின்றனர் சூதுமதியினர்.

பாண்டியனார் வருகிறார் என்றால் ஒரு தளபதி வருகிறார் என்றுதான் எண்ணுவர். அவரைச் சூழ்ந்து இளைஞர்கள் படை செல்லும். அவர்கள் யாவரும் செயல்வீரர்கள். தலைவன் சொல்லை எதிர்பார்ப்பவர்கள். கூலிக்கு மாரடிக்கும் ராணுவ வீரர்கள் அல்ல. பணம் சம்பாதிக்க படைப் பயிற்சிபெற்றவர்கள் அல்ல. அறப்போரிடுபவர்கள். சிந்தனையைத் தெளிவாக்கிக் கொண்டவர்கள்! நாட்டின் நலனுக்குப் போராடுபவர்கள்! அவர்களிடம் சாத்திரத்தைக் காட்டி ஏமாற்ற முடியாது! அவர்களிடையே பகைமை தீயை உண்டாக்க முடியாது! அவர்கள் உள்ளம் எஃகாக வலிவுப் பெற்றுள்ளது. தங்களைத் தாங்களே உருவாக்கிக் கொண்டவர்கள்! அந்தப் படையெடுப்பில் தோல்வியுற்றவர்கள் பலர். அன்பால் கட்டுண்ட அவர்களை அண்டிதான் பிழைக்கவேண்டும். இல்லையெனில் இதுவரை தாங்கள் செய்துவந்த சூதானகாரியங்களை விட்டொழிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளனர் வஞ்சகக் கொள்கையினர்.

பாண்டியனாரின் நாற்பதாவது வயதில் அவரது தந்தை திரு. அய்யநாடார் காலமானார். தன் தம்பி

ரங்கசாமியும், தானும் ஆற்றொணாத் துயரம் கொண்டனர். பாண்டியனார், தந்தைக்கும் தன் குடும்பத்திற்கும் பிரிவு ஏற்பட்டதை நினைந்து வருந்தினார். அதைப்போலவே ஒரு சமயம் பாண்டியனாருக்கும், அவர் ஈடுபட்ட பொது வாழ்விற்கும் தொடர்பற்று அவர் ஒதுங்கி நின்றதை இச்சமயத்தில் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அதைப் பற்றி அண்ணா குறிப்பிடுவதைப் பார்ப்போம்.

"சேலம் நமக்கும் பாண்டியனாருக்கும் இருந்து வந்த 'தொடர்பை' ஓரளவுக்கு வெட்டிவிட்டது என்பதுதான் அனைவரும் அறிவர்—ஆனால் அந்தத் 'தொடர்பு' கெடக்கூடாது என்பதற்காக அவர் எவ்வளவு பாடுபட்டார் என்பது ஒருசிலருக்கு மட்டுமே தெரியும்.

அவர் அதுபோது மாவட்ட ஆட்சிமன்றத் தலைவர். திறம்பட நிர்வாகம் நடத்திய அனுபவமும் உள்ளவர். சட்டசபையிலே இருந்து, சட்ட நுணுக்க அனுபவமும் பெற்றவர். தன்னலமற்றவர்; எனவே அவருடைய அரும்பணி மக்களுக்கு நேர்மையான நிர்வாகத்தைத் தந்து வந்தது.

சுயமரியாதை இயக்கத்திலே தளராது பற்று கொண்டவர்கள், நிர்வாக இடங்களிலே அதிகம் பேர் கிடையாது—அதிகம் பேர்களா—விரல்விட்டுக் கூட எண்ண முடியாது! பாண்டியன் ஒருவர்தான் இருந்து வந்தார்.

சேலம்—பதவிகளை நம்மவர் விட்டுவிட வேண்டும் என்ற திட்டம் உருவான இடம். தீர்மானம் தீட்

டினவன், நான்—பத்திரிகையில் குறிப்பு வெளியிட்டேன்—மாநாட்டுக்கு முன்பே!

அன்புள்ள அண்ணாத்துரை, பத்திரிகையில் உன்னுடைய வெடிகுண்டு பார்த்தேன். "நான் தயார்" என்று கடிதம் விடுத்தார், அந்தக் கொள்கை வழுவாக் கோமான்.

அதுமட்டுமல்ல! இயக்கத்திலே பலர் அறியார். பிறகு நடந்ததை. பதவியை விட்டுவிடத் துணிந்தார். 'ராஜிநாமா'க் கடிதமே எழுதி, எனக்கே அதை அனுப்பி, சர்க்காருக்கு அனுப்பிவிடவும் அனுமதி தந்தார்! ஆகவே அவர் பதவியைத் துறக்க மனமின்றி இயக்கத் தொடர்பை வெட்டிக் கொண்டு விட்டார். என்று எவரேனும் எண்ணினால், அவர்கள் முழு உண்மை தெரியாதவர்கள் என்றே பொருள் "ராஜிநாமாவை" அமுலுக்குக் கொண்டு வருவதற்குள் கட்சியின் நடைமுறைகளுக்கான சில நிபந்தனைகளை அவர் விதித்திருந்தார்—யார் மீதும் குற்றம் கூறுவதல்ல இது—அப்போது அந்த நிபந்தனைகள் செயலாக முடியவில்லை, பிறகே "ராஜிநாமா" நடைபெறவில்லை. அவரும் தொடர்பைத் தளர்த்திக் கொள்ள நேரிட்டது.

* * *

பாண்டியனார் சுயமரியாதை இயக்க நடப்பு முறையிலிருந்து, பெரியார் போக்கு பிடிக்காமல் சிறிதுகாலம் ஒதுங்கினின்றார். பொதுப்பணி ஆர்வம் விடவில்லை. "சுயமரியாதைச் சங்கம்" (Self Respect League) என்ற பெயரால் ஒரு சங்கத்தைப் பதிவு செய்தார். தோழர்கள்

எஸ். இராமநாதன் **M. A. B. L.**, வி. வி. இராமசாமி, அ. பொன்னம்பலனார் போன்றோரின் துணையோடு பகுத்தறிவுப் பிரசாரம் துவக்கினார். அது தமக்குப் போட்டி என்று பெரியார் ஈ. வே. ரா. கருதினார். தடுப்பு முயற்சிகள் நடந்தன. "தானாகவும் செய்யமாட்டார், செய்யவும் விடமாட்டார்" என்று அதனை நிறுத்திக் கொண்டார் பாண்டியனார். எனினும் கொண்ட கொள்கை விட்டாரில்லை. கொள்கை தவறி நடந்ததும் இல்லை. இலட்சியமேக் குறிகோளாகக் கொண்டு பணியாற்ற முற்பட்டார். பொதுநலப் பணியிலே அவர் காட்டிய ஆர்வம் அளவிடற்கரியது.

திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கியபோது ஆதரவு காட்டினார். **1952** ஜனவரியில் கழக உறுப்பினராக சேர்ந்தார். பூவாளூர் அ. பொன்னம்பலனார் அவர்களை இறுதிவரை தன்னுடனேயே இருக்கச் செய்தார். தேனி கலவர வழக்கு நிதியை துவக்கினார். இயக்க வளர்ச்சியிலே நேரிடையாக பங்குக் கொண்டுழைக்க முன்வந்தார். தி. மு. கழகப் பொதுக்கூட்டங்களிலே கலந்து கொண்டார். இயக்கத் தோழர்கட்கு ஆதரவு தருதலும், அவர்களுக்கு உற்சாக மூட்டுவதுமாக பணியாற்றினார்.

கடைசியாக அவர் செய்த பணியும் பொதுநலப் பணியாகும். அதற்காக தன் ஊரைவிட்டு புறப்படவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அவர் தென்னிந்திய ஏல விவசாயிகளின் சங்கத் தலைவர்—அதனால் ஜனவரி மாதம் **16** ந்தேதி சென்னையில் நடைபெற்ற இலவங்கம் விசாரணைக் கமிட்டிக்கு தென்னிந்திய ஏலவிவசாயிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டியுடன் சென்றார். காஃபி

போர்டுபோல் ஏலக்காய்க்கும் மத்திய போர்டு ஒன்று ஸ்தாபிக்க வேண்டுமென்றும், அதன் மூலம் ஏலக்காய் உற்பத்திக்கு விசேட உதவி காட்ட வேண்டுமென்று அரசாங்க மனைச்சென்று அதிகாரிகளிடம் விவாதித்து விளக்கம் கொடுத்தார். இதுவே அவர் செய்த இறுதி பணியாகும் பிற்பகல் இதயநோய் பீடித்தது. **3-30** மணிக்கு அரசாங்கப் பொதுமருத்துவமனை (Go. General Hospital) யில் சேர்க்கப்பட்டார். மனைவிமக்களுக்கு செய்தி சென்றேடியது! அந்நாளில்தான் அறிவகததில் பாண்டியனார் வரவிற்கு காத்திருந்தார்.

"பத்து நிமிடங்களில் வந்துவிடுவார் — அறிவகத்தைக் கண்டு அகமகிழ்வார்-உழைத்திடும் உத்தமரல்லவா அவர், எனவே நமது உழைப்பின் உருவம்கண்டு உளம் களிப்பார், தோட்டம் சென்று காண்பார், கூடத்தில் உலவுவார், மாடிசென்று மகிழ்வார், ஆடிடும் கொடியினைக் கண்டு களிப்பார், பெருமையோடு நம்மைப் பார்த்துப் புன்னகைப் புரிவார், பூரிப்புடன் அவருடன் உரையாடப் போகிருேம், இதோ, இன்னும் சிறிதுநேரத்தில், என்று எண்ணியபடி, நானும் நண்பர் நெடுஞ்செழியனும், வில்லாளனும், ஜனவரித் திங்கள் பதினுறும் நாள், பிற்பகல்', சென்னையில் நமதியக்கப் பணிமனையில், அறிவகத்தில், அவர் வரவு நோக்கிக் காத்திருந்தோம்-அவர் அதுபோது தான், நெஞ்சு வலியால் தாக்குண்டு மருத்துவமனை அழைத்துச் செல்லப்பட்டார், என்ற செய்தியை இரண்டு நாள் கழித்தே அறிந்தோம்—வருந்தினேம்—கவலைப்பட காரணமில்லை, கலக்கமூட்டும் நிலை இல்லை என்றும் மகிழ்வூட்டும் செய்தி கிடைத்தது; மறத்தமிழனின் மரண ஓலையைப் பிறகு கண்டோம், மனம் உடையாமலிருக்குமா

எத்துணை திடீர்த்தாக்குதல்! எத்தகைய பெரும் இழப்பு.

என்று அண்ணா கலங்கிக் கூறும் நிலையில் திராவிடச் சமுதாயமே தேம்பித் தவிக்கத் தவிக்க **22-3-53** ஞாயிறு பிற்பகல் **3**-மணிக்கு இயற்கை யெய்தினார். அதுபோது அவர் வயது ஐம்பத்தொன்பது. பகுத்தறிவுத் தந்தையை இழந்த நமக்கு, பொறுப்புணர்ந்து பணியாற்றும் நம் அண்ணாவை நம்மிடையே விட்டுச் சென்றிருக்கிறார். அவர் காட்டிய பாதையில் நம்மை நடத்திச் செல்லும் திறமை நம் அண்ணா ஒருவருக்குத்தான் உண்டு. ஆகவே இனி அண்ணா கூறுவதை கவனிப்போம்.

நெஞ்சிலே நெருப்பு, கண்களில் நீர்த்துளிகள், கரத்திலே நடுக்கம், கருத்திலே திகைப்பு—இந்நிலையில் தமிழகத்துக்கு—திராவிடச் சமுதாயத்துக்கு—பகுத்தறிவினருக்கு ஈடு செய்ய முடியாத இழப்பினை, ஆறுதல் பெற முடியாத துயரத்தினைக் குறித்துத் தீட்ட முனைகிறேன்—முடியாமல் திகைக்கிறேன்.

நண்பர்களே திராவிடரே! பகுத்தறிவு இயக்கத் தோழர்காள்! பாண்டியனைப் பறிகொடுத்துவிட்டோம்—ஒளியை யிழந்துவிட்டோம்-தலைவனை இழந்துவிட்டோம்.

முப்பதாண்டுக்குமேலாக அந்த முடிசூடா மன்னன், மாற்றாருக்குப் புயலாகவும், நண்பர்களுக்குத் தென்றலாகவும், உழைப்பாளிகளுக்கு உறுதுணையாகவும், எத்தர்களுக்கு எதிரியாகவும் இருந்தாற்றிய அரும் பணியினால் புதியதோர் பொலிவு பெற்றது. அவர் உரை கேட்டு மட்டும் அல்ல. அவர் செயல் கண்டு எண்

ணற்ற இளைஞர்கள், அவரைத் தங்கள் தலைவர் என்று, மகிழ்வுடன் கொண்டனர். பாண்டிய மண்டலத்திலே, மிக அதிகமாகவும். பிறமண்டலங்களிலே, குறிப்பிடத்தக்க பெரும் அளவுக்கும் மாவீரன், பரணிபாடி, தரணி ஆண்ட தமிழன் அடைந்திருக்கும் தாழ்நிலையினை எடுத்துக்கூறி தன்மானத்தின் மேம்பாட்டினை அறிவுறுத்தி வந்தார். அவர் வருகிறார் ஓர் நகருக்கு என்றால், இயக்கம் புது முறுக்கு அடைந்து விட்டது என்று பொருள். அத்துணை அருமையான தொண்டாற்றி வந்தார், மக்களின் மனப் போக்கு மாறுதலடைவதுகண்டு மகிழ்ந்தார், ஆற்றலுக்கு தக்க பலன் பூத்திடக் கண்டார். பூரிப்படைந்தார்—மன திலே மேலும் பல திட்டங்கள் வகுத்துக்கொண் டிருந் தார். மேலும் நாட்டுப் பணியாற்ற அவருடைய அறிவாற் றலைத் திராவிடர் பெற இருந்தனர் புதியதோர் வேகத் துடனும், அளவுடனும் அத்தகையவேளையிலே மறைந்து விட்டார்—திராவிடச் சமுதாயம் மிகப் பெரிய வாய்ப்பை இழந்து விட்டது.

செல்வக் குடிப்பிறந்த பாண்டியன், காடுகளைக் கழனி களாக்கி, கட்டாந்தரைகளை பூந்தோட்டமாக்கி, பாம்பு புரளுமிடத்தையும், புலிக்குகை உள்ள மலையையும், தித் திக்கும் கனிகுலுங்கும் பண்ணைகளாக்கிய பெரும் உழவர். மிகக் கடுமையான உழைப்பைக் களிப்போடு ஏற்று நடத்தி, வேளாண்மை எனும் பண்புள்ள சொல்லுக்கு இலக்கியமாக விளங்கி வந்தார், வீரத்தலைவனை அல்லவா நாம் இழந்து விட்டோம்.

பாண்டியன் நமது பாதுகாவலர்! சுயமரியாதை இயக்கத்தின் படைத்தலைவர்! அவருடைய சொல்லே

முரசு! அவருடைய கண்ணொளியே எதிரியைத் துளைக்கும் கணை! அத்தகைய வீரப்பணி புரிந்தவர் பாண்டியன்—நாம் மறந்துகூடப் போயிருப்போம் பலப்பல சம்பவங்களை, சுயமரியாதை இயக்கத்தின் பகைவர்கள் மறந்துவிட முடியாது. அந்த மாவீரன் சுயமரியாதை இயக்கத்தை அவ்வளவு ஆற்றலுடன் கட்டிக்காத்து வந்தார்.

பணம் அவர் காலடியில் குவிந்தது; ஆனால் படாடோபம் அவரைக் கண்டு உறவாடப் பயந்தது! ஆற்றல் அவரிடம் நிரம்ப இருந்தது; ஆனால் பதவி மோகம் அவரை நெருங்கிட அஞ்சியது' செல்வமும் செல்வாக்கும் அவருக்கு ஏராளம்; ஆதிக்கச் செருக்கு அவரைத் தீண்டவில்லை! பண்புகளின் பெட்டகமாய் விளங்கிவந்தார் ஏழையின் கண்ணீரைக் காணச் சகியாத உளம்படைத்தவர்! செல்வரின் செருக்கைக் கண்டால் சினம் கொள்ளும் வீரர்! உழைப்போர் உடனிருப்பதில் உவகைக் கொண்டவர்! உல்லாச புரியின் தொடர்பு அவருக்கு எட்டி! அவர் நாம் யாரும் அடையமுடியாத செல்வத்தைப் பெற்றிருந்தார். ஆனால் நம்மோடு இருப்பதையே பெருமை என்று கொண்டார்.

எவ்வளவு கனிவுடன், கொஞ்சுமொழியில் கூறுவார். "நமது பிள்ளைகள்" என்று! அதைக் கூறும்போது அவ டைய அகமலர்ச்சியை அழகுற முகப்பொலிவு எடுத் காட்டுமே! அந்த ஓவியத்தையல்லவா, மரணம் அழித்துவிட்டது! இயக்க ஊழியர்களிடம் அவர் காட்டிய பரிசு எவ்வளவு.

இயக்கத்திலே இரண்டறக் கலந்திருந்த பாண்டியனார். சில ஆண்டுகள் ஒதுங்கினார். என்றாலும், திராவிட

முன்னேற்ற முன்னேற்றக்கழகம் நல்ல அமைப்பு முறையுடன் மலர்ந்ததும், மனமுவந்து வரவேற்றதுடன், ஓராண்டுக்கு முன்பே, உறுப்பினராகவும் சேர்ந்து, பணி புரியத் தொடங்கினார் - பூரித்துக் கிடந்தேன்—திராவிடச் சமுதாயம் தேம்பித் தவிக்கத் தவிக்க நமக்கு கிடைக்க இருந்த கருவூலத்தை இழந்து விட்டோம்.

ஒரே ஒரு வழி உண்டு—ஆறுதல் பெற, மனப் புண்ணைப் போக்கிக்கொள்ள—அவர் இறந்தார், இறந்து விட்டார் என்பதை இனி மறப்போம்—அவர் இறந்தார் என்பதல்ல, இனி நாம் கூறவேண்டிய பேச்சு—அவர் நம்மோடு கலந்துவிட்டார். அவருடைய பண்புகளை, ஆற்றலை, அறிவுத் திறனை நமக்குத்தான் அளித்துச் சென்றிருக்கிறார். எனவே அவர் நம்மோடு வந்துவிட்டார் என்றே சொல்லவேண்டும். அவர் காட்டிய பாதையில் நாம் நடந்து செல்லுவதும், நம்மைப் பிறர் பார்த்து, "இவர்கள் அந்தப் பாண்டியன் படையினர்' என்று கூறுவதும்தான், நாம் செய்யவேண்டிய கடமை.

நமது செயல் மூலம் அவர் நம்மோடு இருக்கிறார் என்பதை எடுத்துக்காட்ட வாரீர் என்று அழைக்கிறோம். கண்ணீரைத் துடைத்துக்கொண்டு கடமையாற்ற வாருங்கள் என்று அழைக்கிறேன்.

வாழ்க பாண்டியனார் புகழ்!

வளர்க அவரின் பண்புகள்!!

o o o

திராவிட முன்னேற்றக் கழகம் வருங் காலத்தில் சிறந்தவொரு நிலை எய்தி ஆக்கம் பயக்கும் உறுதியுடைய கழகமாக மாறும் என்பதிலே அவர் அயரா நம்பிக்கைக் கொண் டிருந்தார். வீட்டிலும் சரி, வயலோரத்திலும், படித்தோர் கூட்டத்திலும் சரி, பாராளும் அதிகாரிக ளிடத்தும் சரி, நண்பர்களிடத்தும் சரி, மற்றோரிடத்தும் சரி தம்மை திராவிட முன்னேற்ற கழகத்தைச் சார்ந்த வன் என்று சொல்லிக்கொள்வதிலும், தம்முடைய ஆதரவு கட்சி ரீதியிலும் அது ஒன்றுக்குத்தான் கிடைக்கும் என்று திட்டவட்டமாகக் கூறிவிடுவதிலும் பெருமை கொள்ளும் பண்பினராகத் திகழ்ந்தார்.

—இரா. நெடுஞ்செழியன்

திராவிட முன்னேற்றக் கழகத்து அங்கத்தினராக ஆகும் முன்பே, ஏன் அரசியலில் இறங்கியதிலிருந்து கடைசி வரை கட்சிக் கொள்கைகளையே வாழ்வின் குறிக் கோளாகக் கொண்டிருந்தார் என்று கூறுவது மிகை யாகாது. கடைசியாகக் கூறினார், இந்த வருஷத்திய மாசூல் எடுத்து கொடுத்துவிட்டு நானும் ரெங்கப்பனும் ஓய்வு எடுத்துக்கொள்ளப் போகிறோம். நான் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு முழுநேரம் வேலை செய்யப் போகிறேன் என்றார். ஆனால் எல்லாம் முடிந்துவிட்டது. ந்த நேரத்தில் நடக்கக்கூடாதது நடந்துவிட்டது.

டபிள்யு. பி. ஏ. ஆர். நாகராசன்
(பாண்டியனார் தம்பி மகன்)

பாண்டியனிடம் எங்களுக்குச் சிறிது நாளாக அதிக நெருக்கமில்லாமல் போய்விட்டது என்றாலும், வாழ்க்கை

யில் எங்கள் முன் அடிக்கடி அவரது நாயகமும், செயல் உருவகமும் தோன்றிக்கொண்டே இருக்கும்.

குறிப்பாக, என்னிடத்தில் பாண்டியனுக்கு ஒரு மதிப்பும், மரியாதையும், பின்பற்றும் தன்மையும் உண்டு. ஒரு பெரிய செல்வந்தர். பொருளாதாரம், சமயம், சமுதாயத் துறைகளில் முன்னேற்றமடைந்துகொண்டு வரும் ஒரு பெரிய செல்வச் சமுதாயத்திற்கு உண்மையான தலைவர். அப்படிப்பட்டவர் ஒரு புரட்சி இயக்கத்தில் தலைவருக்குத் தலைவராகவும், தொண்டருக்குத் தொண்டராகவும் இருந்து தொண்டாற்றி வந்ததுடன், எந்தச் சந்தர்ப்பத்திலும், சுமார் **20** ஆண்டு இணைபிரியாதிருந்து, எல்லா துறையிலும் ஒத்துழைத்து வந்து, பல துறையிலும் உதவி புரிந்து வந்தவர் ஆவர்.

மற்றும், எனது சுயமரியாதைப் பிரச்சாரத்திற்கு பாண்டியன் ஒரு சிறந்த பெரிய ஆதரவாளராக இருந்தார் என்பதையும் நான் என்றும் மறக்க முடியாது. அவரும், அவரது குடும்பமும் என்னிடம் உடன் பிறந்த சுற்றத்தார்கள்போல் அன்பு பாராட்டி வந்ததையும் மறக்க முடியாது.

உண்மையான உள்ளம், உறுதியான நெஞ்சு, எடுத்த காரியத்தில் வெற்றி காணவேண்டும் என்கின்ற ஆர்வம் முதலிய அரிய உயர் குணங்கள் அவரிடம் இருந்தன.

கொள்கை வேற்றுமையால், சிலகாலம் நெருங்கிய சம்பந்தம் இருக்க இல்லையென்றாலும்

"பற்றற்ற கண்ணும் பழமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள."

—என்ற பொய்யாமொழியின் கூற்றுப்படி எந்நேரமும் அவரது பழைமை (உறவு) நினைப்பிலும் பாராட்டுதலிலும் இருந்து வந்தது.

—பெரியார் ஈ. வே. இராமசாமி.

பாண்டியனார் எண்ணப்படி காரியங்கள் நடைபெற்றிருக்குமானால், இன்றைய தினம் இந்த நாட்டை காங்கிரஸ் சமய சஞ்சீவிகள் ஆளமுடியாது. புரட்சிவேகம் பொருந்திய சுயமரியாதைக் கொள்கை ஆண்டிருக்கும். இனியும் இந்நாட்டில் புத்துயிர் முளைத்துப் புரட்சி வேகத்தில் முன்னேற்றம் ஓங்க வேண்டுமானால், பாண்டியனார் எண்ணத்தை நிறைவேற்றிவைக்க வேண்டும்.

—எஸ். இராமநாதன் எம். ஏ. பி. எல்.

பேச்சுக்குப் பெரியார்; செயலுக்குப் பாண்டியனார். படைப்பது பெரியார்; பாதுகாப்பது பாண்டியனார். அறிவு ஒன்று; ஆற்றல் ஒன்று. இவ்விரண்டு தலைமைச் சக்திகளும் இணைந்து உருவாக்கியதே சுயமரியாதை இயக்கம்; தன்மானப் பகுத்தறிவு இயக்கம்; திராவிடத்தின் எதிர்காலப் புரட்சிகளுக்கு வித்தூன்றிய அடிப்படை புரட்சி இயக்கம்.

—ப. கண்ணன்

நம் மாவீரர் பாண்டியனார் அவர்கள் ஐம்பத்து ஒன்பது ஆண்டுகள் உயிரோடு வாழ்ந்து, அறுபதாவது ஆண்டு தொடக்கத்தில் உயிர் நீத்தார். அவர்கள் வாழ் நாட்களில் பெரும் பகுதி சமூக முன்னேற்றத்திற்கும், அறிவு வளர்ச்சிக்கும், கல்வி, கைத்தொழில், விவசாயம், வாணிபம் போன்ற பல துறைகட்கும் அரும்பணியாற்றியதை மறக்க முடியாது.

சுயமரியாதைச் சங்கம், பகுத்தறிவுச் சங்கம், சமூக சீர்திருத்தச் சங்கம், தொழிலாளர் சங்கம் ஆகியவற்றில் ஈடுபட்டிருந்த பலரும் அவரது பிரிவு கேட்டு கலங்கு கின்றனர். பகுத்தறிவுத் தளபதியை நாம் பறிகொடுத் தோம்.

—பூவாளூர். அ. பொன்னம்பலனார்

பொதுவாழ்க்கையில் புகுந்திருப்பவர்கள், இனி புக விரும்புகிறவர்கள் இவர்களுக்கு "பற்றற்றுப் பணிபுரிதல்" என்ற பாதையைச் செப்பனிட்டுத் தந்தார். தந்ததுமட்டு மல்ல—அதில் அவரே நடந்து காட்டினார்.

பாண்டியனார் வகித்திருந்த பதவிகள் எதுவும் அவர் விரும்பித் தேடியதில்லை. எல்லாம் அவரைத் தேடிச் சர ணடைந்தவைகளே. இது இருபதாண்டு கொண்டிருந்த நெருக்கத்தில் நானறிந்தவைகள்.

—ப. ரா. முத்துச்சாமி.

பொதுவாழ்வில் அபிப்பிராய பேத காரணமாக, ஒரு வரையொருவர் விரோதிகளாகப் பாவித்துத் தொல்லை விளைவிக்கும் காட்டுமிராண்டித்தனமற்ற பெருந்தகையார் சவுந்திர பாண்டியனார் அவர்கள். மக்கள் மதிப்பிற்கு பெரி தும் உரித்தான தலைவர்களில் முதல்வராவர். அவரது பண்பு, இலட்சிய உறுதி ஆகியவைகள் நமக்கு வழிகாட்டி யாகவும் அமைந்துள்ளது. பாண்டியனாரின் பண்பு பொது வாழ்வில் வளரப் பெரிதும் விரும்புகிறேன்.

சவுந்திர பாண்டியனாரே நாங்கள் உங்களைப் பறி கொடுத்தாலும் உங்கள் பண்பினை, இலட்சிய உறுதியை

நாங்கள் ஒருக்காலும் பறிகொடுத்துவிட மாட்டோம். இது உறுதி.

—என். வி. நடராசன்
(திராவிடன் ஆசிரியர்)

திரு. W. P. A. சௌந்தர பாண்டியன் அவர்களைப் பற்றி எழுதுவோமானால், எதைப்பற்றி எழுதுவதென்று தோன்றவில்லை.

தண்டாமலீவது தாளாமை என்பதையா? பொருளுடையவராய் இருந்தும், புன்னகை புரியும் முகத்தையா? வாஞ்சையுள்ள இனிய சொற்களையா? அறிவுடையோர் அறிவிலாதார் யார் சொன்னாலும் செவி சாய்க்கும் குணத்தையா? யாமறியாது இன்னும் எத்தனை குணங்கள் அமைந்திருந்தனவோ? இத்தகையார் மறையலாமா? இயற்கை இதுவா?

—மூவாலூர் இராமாமிர்தத்தம்மாள்

வாங்கதம்பி—என்ற அவர் அழைக்கும்போது நமது வாயெல்லாம் தேனூறும், தித்திக்கும், சாந்தம், அமைதி, அடக்கமான பேச்சு—இவைகள் பாண்டியனாரின் உயர்ந்த பண்புகள்.

ஆனால், அபிப்பிராயத்தில் கொள்கைக்கு முதலிடம் கொடுத்து அவர் உரையாடும் போது குரல் கனத்திருக்கும், வார்த்தைகள் ஓங்கிவிடும்—கம்பீரமாக காட்சியளிப்பார். கண்கள் கனலாக தோன்றும்!

அவர் பணக்காரர், ஆனால் பணக்காரராக வாழவில்லை...அவர் நிலப்பிரபு, ஆனால் அவர் உழவனாக,

நிலத்தின் விளைவோடு உறவாடுபவராகத்தான் இருந்தார். புஞ்சை நிலத்தில் புதுமைகள் செய்தார். உற்பத்தியை பெருக்கு என்று வெறும் ஓலத்தோடு நிற்கவில்லை அவர், செயலில் காட்டினார்.

—இரா. சு. தங்கப்பழம்

*   *   *

"உண்மையான கட்சிப் பற்று உள்ள தோழர்களுக்கு இயக்கத்திலுள்ள சிறுசிறு குறைகள் தெரிந்தாலும் உள் ளங் குமுறும். எடுத்துச் சொல்லும்போது நாவாடும். இயக்கம் நல்ல முறையில் நடக்க வேண்டுமானால்—தன் னுடைய இலட்சியத்தை துரிதமாய் அடைய வேண்டு மானால், கொள்கைப் பிடிப்புள்ள தோழர்கள் இயக்கத்தை நிரப்ப வேண்டும்.

இயக்கத்தை தன் சுயநலத்துக்கு உபயோகப்படுத்து பவனை, சுயநலத்துக்காக இயக்கத்துக்குள் புகுபவனை சுய நலத்துக்காக இயக்கத்தை மாற்றுக் கட்சிக்காரனிடம் மண்டியிட்டு பல்லைக்காட்டி பணம் வாங்கி காட்டிக் கொடுப்பவனை, ஒழுக்கம் நற்பண்பு இல்லாதவனை, எவ் வளவு பெரிய பட்டதாரியானாலும் சரி, பேச்சாளனானா லும் சரி, எழுத்தாளனானாலும் சரி, இயங்கத்திலிருந்து விரட்டியடித்து; நம் இயக்கம் கட்டுப்பாடுள்ளது, அமைப்பு முறையுள்ளது, நேர்மை யாளரையும் தன்ன[illegible] மறுப்போரையும், காட்டிக் கொடுத்துப் பேரம் பேசாத வர்களாகவும், சுலநலனுக்கு சோரம் போகாதவர்களாக வும் உள்ள இயக்கம் நம் இயக்கம் தான் என்று எல்லோ ரும் சொல்லும்படி இயக்கத்தை கட்டி வளருங்கள்."

என்று பாண்டியனவர்கள் **11** ஆண்டுகளுக்கு முன் அறிவுறுத்தியது இன்னும் என் காதுகளில் ரீங்காரம் மிட்டுக் கொண்டே இருக்கிறது.

—M. S. சிவசாமி

குறிப்பாக பெண் இனத்துக்காக—அந்த இனம் இழிவு நீங்கி தலை நிமிர காட்டிய வழியில்—தீட்டிய தொண்டில் நமது இயக்கப் பெண்கள் அனைவரும் ஈடுபட வேண்டும் — ஆடம்பரமற்ற தோற்றத்துடன், அன்பு நிறைந்த உள்ளத்துடன், ஒற்றுமை பொங்கும் பண்புடன் பட்டி—தொட்டி—படித்தவர் — படியாதவர் — உயர்ந்தவர்—தாழ்ந்தவர் என்ற பாகுபாடற்று ஒரே தன்மையுடன் யாவருடனும் பழகி கடமையைச் செய்யவேண்டும். அது நமது பொறுப்பு! அதுவே பாண்டியனாரிடம் நாம் கொண்டிருக்கும் அன்பின் அடையாளம். பண்பின் எடுத்துக் காட்டுமாகும். பாண்டியனாரின் பண்பு வாழ்க! பாண்டியனாரின் இலட்சியம் வெல்க! பாண்டியனாரின் அன்பும் எளிமையும் வளர்க!

—பொற்செல்வி இளமுருகு

நமது பாண்டினார் உடல் மறைந்தது. ஆனால் அவர் செயலாற்றி வந்த தொண்டு நம் கண் முன் நிற்கிறது. அவர் போன்ற தன்னலமற்ற உண்மை உள்ளம் படைத்தவரை எக்காலம் எந்த நேரத்தில் காணப்போகிறோம்! அவர் மறைவு திராவிட இயக்கத்திற்கும் குறிப்பாக திராவிட முன்னேற்ற கழகத்திற்கும் ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும்:

K. K. நீலமேகம், குடந்தை

* * *

ஆசிரியர்

# உடையார்பாளையம் வேலாயுதம்

"அவனென்ன வாய்மூடிக்கொண் டிருக்கமாட்டான் போலிருக்கிறதே" என்றான் ஒருவன்.

"எப்படியிருப்பான் நாம் சும்மாயிருந்தால். இது மட்டுமா பேசுவான்; இதனைவிட அதிகமாகப் பேசுவான்; இன்றைக்குப் பேசியதைவிட நாளைக்கு அதிகமாகப் பேசுவான்" என்றான் வேறொருவன்.

"யாரைப்பற்றியப்பா இப்படி அர்ச்சனை" என்ற குரல் கொடுத்துக்கொண்டே வந்தான் அடுத்தவன்.

"யாரைப்பற்றி...அந்த வாத்தியாரைப் பற்றித்தான்" என்றான் முதல்வன்.

"உங்களை என்ன செய்தான் அவன். அவனுண்டு, அவன் வாழ்வுண்டு என்று போகிறான். பாவம் அவனைப் போய்...!" என்று நீட்டினான் மூன்றாமவன்.

"போதும் நிறுத்து. உன்னையும் என்னையும் பெயர் குறித்திடவேண்டுமா?" என்றான் ஆத்திரத்துடன் இரண்டாமவன்.

"என்ன தவறு செய்துவிட்டான் அவன்? விளக்கமாகச் சொல்லாமல் ஆத்திரப்படுவதால் பயன் என்ன?" என்றான் மூன்றாமவன்.

"அவன் ஆசிரியர் வேலை செய்துகொண்டுதானே இருக்கிறான்."

"ஆமாம்!"

"இவனுக்கு கட்சியும் கத்தரிக்காயும் எதற்கு?"

"என்ன கேள்வியப்பா இது! நாம் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்திருக்கவில்லையா? அவனுக்கும் அதுபோல ஒரு கட்சியில் சேர்ந்துகொள்ளும் உரிமையில்லையா?"

"போதும் நிறுத்து! உன் போக்கு மிக நன்ருக இருக்கிறது. நீ ஒரு காங்கிரஸ்காரனு? காங்கிரஸ் கட்சி ஒன்றைத் தவிர வேறு கட்சி இருக்கலாமா? அதுவும் உண்மையான தேசபக்தர்களாகிய நமக்கு முன்னல் வேறு ஒரு கட்சியைப் புகழ்ந்து பேசுவதும், நம்மை நையாண்டி செய்வதுமாக நடைபெற்றுக்கொண் டிருந்தால் நாம் கேட்டுக்கொண்டு வாய்மூடி மௌனிகளாகவா இருக்க வேண்டும்?"

"உன்னை மௌனியாய் இருக்கச் சொன்னது யார்? நீயும் அவனைப்போல் காங்கிரஸ் கட்சியின் பெருமையையும், காந்தி அண்ணலின் உயர்வையும் எடுத்துக்கூறு. எல்லாம் சரியாய்விடுகிறது."

"போதும் நிறுத்தும். நேற்றுப் பிறந்ததுகள் நம்மை எதிர்த்துப் பேசினல் அதற்காக வேலையைவிட்டு கூட்டம் கூடி அவன் கூறியதற்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டா இருப்பது? நமது மதிப்பு, பெருமை, புகழ் இவைகளெல்லாம் என்ன ஆவது?"

"அப்படியென்ருல் என்ன செய்யப் போகிருய்?"

"யோசித்துக்கொண் டிருக்கிறேன் புரியவில்லை."

"ஆமாம்! அவன் பேசியதில் மயங்கிவிட்டார்களாமே சிலர்."

"சிலர் என்ன? இந்த நிலை நீடித்தால் நீ கூடத்தான் மாறிவிடுவாய். கடவுள் இல்லையாம்—காங்கிரஸ் ஆட்சியில் நன்மை ஏற்படவில்லையாம்; நாடு நல்ல நிலைமையில் இல்லையாம். இதற்காக திராவிடநாடு திராவிடர்க்கே ஆக வேண்டுமாம். அப்போதுதான் இன்பம் நிலவுமாம்.

என்ன துணிச்சல். இவனை இனி விடப்போவதில்லை. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்."

"எப்படி வைப்பது?"

"எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது."

"என்ன அது?"

"தீர்த்துக் கட்டி விடுவோம்."

"என்ன...!"

"ஆமாம்! இதுதான் முடிவு."

"உனக்கென்ன மூளைக் கோளாரா?"

"இல்லை, மூளை சுறுசுறுப்பாக வேலை செய்கிறது."

"மாட்டிக்கொண்டால்...."

"என்ன செய்வது? என்றுதானே கேட்கிறாய்? அந்த நம்பிக்கையும், நெஞ்சுத் துணிவும் இல்லையென்றால் இறங்குவேனா இந்த செயலில்."

"என்னமோப்பா ஜாக்கிரதை."

"பயந்தாங்கொள்ளி—உலகம் தெரியாதவன்—எனக்குத் தெரியும் என்னென்ன நடைபெறும் என்று! நான் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டால்கூட நான் நிரபராதி என்ற நல்ல பெயருடனே வெளியே வந்து விடுவேன். அந்த அளவுக்கு எனக்குப் பக்கபலம் உண்டு தெரிகிறதா?"

"சரி நான் வருகிறேன்" என்று கூறிவிட்டு மூன்றா மவன் சென்றுவிட்டான்.

மற்ற இருவரும் சிரித்துக்கொண்டே சென்றனர்.

இந்த உரையாடல் உண்மையில் நிகழவில்லை என்றா லும் இதுபோன்ற கருத்துகளுடன் உடையார்பாளையத்

தில் நிச்சயமாக நடைபெற்றிருக்கவேண்டும் என்று யூகிக்க இடமிருக்கிறது.

இவ்விதமான தீய எண்ணங்கள் சில வஞ்சகர்கள் உள்ளங்களிலே எழுந்ததன் விளைவு என்னவாயிற்று? ஒரு திராவிட மாணிக்கம் மறைந்தது.

ஆம்! உடையார் பாளையத்தில் ஆசிரியர் பணியாற்றி வந்த தோழர் வேலாயுதம் அவர்கள் திராவிட இயக்கத்தை ஆதரித்தார். அதைப் பற்றி பேசினர். இதுவே அவர் செய்த குற்றம். இந்தக் குற்றத்திற்கு அவர் பெற்ற தண்டனை மிகப் பெரிது—கொடியது. சொல்லக் கூசுவது. வாய் வராதது...கண்களிலே நீர் சேர்ப்பது.

ஆம்! தோழர் வேலாயுதம் தூக்கிலே தொங்கவிடப் பட்டார்.

எப்படி?

வஞ்சகர்களால் அடிக்கப்பட்டு தூக்கிலே மாட்டப் பட்டார்.

வாருங்கள் என்று ஆசைகாட்டி அழைத்துச்சென்று அவர் அலற அலற அடித்து கொன்றபின் மரத்திலே மாட்டினர் பிணமாக.

ஒரே அடியில் அடித்து கொன்றிருந்தாலும் பரவா யில்லை சற்று ஆறுதல் அடையலாம்; ஆனல் சித்திரவதை செய்யப்பட்டு, உயிர் துடிக்கப்பட்டு—மனம் வெதும்பி ஆவி நீத்தார் தோழர் வேலாயுதம்.

ஏன்? தன்னை ஒரு திராவிடன் என்று கூறிக்கொண்டார். திராவிடர்களை முன்னேற்றும் உண்மையான இயக்கம் திராவிடர் இயக்கம் என்று கூறி அதனை ஆதரித்தார்.

இதற்காக - இந்த ஒரு சாதாரண காரணத்திற்காக இளைஞர் — ஆசிரியர் — அவர்களின் உயிரே பிரிந்தது.

இந்த அளவுக்கு கொடுமை செய்யும் வஞ்சக எண்ண முடையவர்கள் திராவிட இயக்கத்தை எதிர்பவர்கள் என்று நமக்குப் புலனாகிறது.

ஆம்! மாண்டார் மாண்புமிக்க மறத்தமிழர்மாண்டார். அவர் மாண்டார். திராவிடன் என்று தன்னை கூறிக் கொண்டதால் மாண்டார். இந்த செய்தி பத்திரிகைளில் வெளிவந்தது. திராவிடர் உள்ளங்களில் ஒரே பரபரப்பு- திராவிடத்திற்கு இந்தச் செய்தி எட்டியது எங்கும் கண டனம்.

அதன்பிறகு அன்று ஆட்சிபீடத்தில் அமர்ந்திருந்த உத்தமர் ஓமந்தூரார் தலையீட்டின்மேல் வழக்கு தொட ரப்பட்டது. நடைபெறவேண்டிய சடங்குகள் நடைபெற் றது குற்றவாளிகள் விடுவிக்கப் பட்டனர்.

இந்த தீர்ப்பு சரியல்ல மறுபடியும் விசாரணைசெய்ய வேண்டும் என்று பொதுமக்கள் குரல்எழுப்பியது. ஆகவே மறுபடியும் வழக்கை கவனிக்குமாறு ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் கூறினார். மறு வழக்கும் நடந்தது குற்றவாளி கள் விடுவிக்கப் பட்டனர் ஆம்! வழக்கு தள்ளப்பட்டது.

ஆம்! வேலாயுதம் மறைந்தார். ஆனால் அவருடைய கொள்கை—இலட்சியம் மறையவில்லை. தான் திராவிடன் தான் என்பதை தன் உயிரைத் தியாகம் செய்து காட்டிய மாவீரர்.

அவர் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு அனுதா பம் காட்டுவது தவிர நாம் வேறென்ன செய்ய முடியும்?

வாழ்க அவர் புகழ்! வாழ்க திராவிடம்.

ஸ்ரீ மகள் அச்சகம், சென்னை-1

6c

x


திராவிட இயக்கத் தலைவர்கள்

# வாழ்க்கை வரலாறுகள்

★

| | | |
|---|---|---|
| 1. | அறிஞர் அண்ணாதுரை | 0 8 |
| 2. | தலைவர் பெரியார் | 0 8 |
| 3. | புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் | 0 8 |
| 4. | கடமை வீரர் கருணாநிதி | 0 8 |
| 5. | அஞ்சா நெஞ்சன் அழகர்சாமி | 0 8 |
| 6. | பன்னீர் செல்வம், பாண்டியனார், வேலாயுதம் | 0 8 |
| 7. | நெடுஞ்செழியன், நடராசன், மதியழகன் | 0 8 |
| 8. | சம்பத், நீலமேகம் | 0 8 |
| 9. | ஆசைத்தம்பி, சிற்றரசு | 0 8 |
| 10. | இராமாமிர்தத்தம்மையார், பூங்கோதை, அருண்மொழி, | 0 8 |

— கழிவு வழக்கம் போல் —

கிடைக்கும் இடங்கள்

**கலைமன்றம்**
122, வரதாமுத்தியப்பன்தெரு,
சென்னை—1

**M.S. ராமுலு கம்பெனி**
286, சைனா பஜார்
சென்னை—1